# 8

# நிதியியல் துறைச் செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும்

குறைந்தளவு பேரண்ட முன்மதியுடைய கரிசனைகளுடன், இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் காணப்பட்ட சவால்மிக்க பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் நிதியியல் துறை தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. 2015 இறுதியிலிருந்து 2018 ஏப்பிறல் வரை நடைமுறைப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சியில் காணப்பட்ட வீழ்ச்சித்தன்மையுடன் வங்கித்தொழில் துறைச் சொத்து மிதமாக அதிகரித்தது. அதேவேளை பாசல் III ஒழுங்குவிதிகளின் கீழ், அதிகரித்த மூலதனப் போதுமை விகிதத்தினைப் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்புக்களின் மீது வங்கித்தொழில் துறையின் மூலதனம் மேம்பாடொன்றினைக் காட்டியது. மேலும், வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை மட்டம் தேவைப்படுத்தப்பட்ட முன்மதியுடைய மட்டங்களுக்கு மிக மேலே தொடர்ந்தும் காணப்பட்டது. இருப்பினும் கூட, தற்பொழுது முகாமைப்படுத்தத்தக்க மட்டத்தில் காணப்படும் சொத்துக்களின் வீழ்ச்சியடைந்து செல்லும் தரம் உரிய நேரத்தில் இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுவிடின் வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மைக்கும் கடன் தீராற்றலுக்கும் மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வங்கிகளின் இலாபத்தன்மையில் சிறிதளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருக்கிறது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் செயலாற்றம் மேலும் மெதுவடைந்தமைக்கு உயர்ந்த வட்டி வீதங்கள், மிதமான பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பனவே முக்கிய காரணங்களாகும். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்கள் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டவிடத்து சொத்துக்களின் தரமும் இலாபமும் வீழ்ச்சியடைந்தன. இத்துறையிலுள்ள குறிப்பிட்ட நலிவடைந்த நிதிக் கம்பனிகளை மீளெழுச்சிப்படுத்துவதற்குத் தேவையான பல நிவாரண வழிமுறைகளை மத்திய வங்கி மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, கடன் தீராற்றலற்ற கம்பனிகளின் தீர்மானம் தொடர்பிலும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளை, இக்காலப்பகுதியில் வங்கிக் கிளைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் என்பனவற்றின் எண்ணிக்கைகள் அதிகரித்தமையின் மூலம் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் தன்மை மேம்பட்டு வருகின்றது. காப்புறுதி, முதனிலை வணிகர்கள், கூறுநம்பிக்கைகள் மற்றும் பங்குத்தரகர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மற்றைய நிதியியல் நிறுவனங்கள் துறை பாரிய உறுதிப்பாட்டுக் கரிசனைகள் எதுவுமில்லாமல் அவற்றின் வியாபாரத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தின. அதேவேளையில் உள்நாட்டு பணச்சந்தை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகள் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் தளம்பலடைந்தன. அந்நேரத்தில் உள்நாட்டுப் பணச் சந்தையில் அவதானிக்கப்பட்ட கணிசமான திரவத்தன்மைப் பற்றாக்குறை உயர்ந்த வட்டி வீதங்களைத் தோற்றுவித்தன. இறக்குமதியாளர்களின் உயர்ந்த கேள்வி மற்றும் போதுமானதற்ற உட்பாய்ச்சல்கள் என்பனவற்றிற்கு மத்தியில், 2018இன் முதற்காலாண்டுப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உறுதியானதாகக் காணப்பட்ட செலாவணி வீதம் அதன் பின்னர் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்தது. உலகளாவிய சந்தையில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் வலுப் பெற்றமையானது தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிலிருந்து மூலதனத்தினை மீளப்பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்ததுடன் இது இலங்கை ரூபாவின் மீது மேலதிக அழுத்தங்களையும் தோற்றுவித்தது. மேம்பட்ட படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் மற்றும் அரச பிணையங்களின் வழங்கல் செயன்முறையில் காணப்பட்ட அதிகரித்த வெளிப்படைத்தன்மை என்பனவற்றிற்கிடையிலும் சந்தை மனோபாவங்களில் ஏற்பட்ட மாற்றங்களையும் அதேபோன்று அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளையும் மற்றும் வெளிநாட்டு நிதியிடலின் கிடைப்பனவினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச பிணையங்கள் மீதான விளைவு ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது. பங்குச் சந்தைச் செயலாற்றம் தளம்பலுடையதாகவும் மெதுவானதாகவும் காணப்பட்டதுடன் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் உறுதியற்ற வெளிநாட்டு நடவடிக்கைகளுடன் மெதுவடைந்தும் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் கம்பனிப் படுகடன் சந்தை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. நிதியியல் உட்கட்டமைப்பினைப் பொறுத்தவரையில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை பெரும் தடைகளெதுவுமின்றி சுமுகமாக தொழிற்பட்ட வேளையில் அதற்காக புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பின்பற்றப்பட்டன.


## நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்

### வங்கித்தொழில் துறை

- **வங்கித்தொழில் துறையானது தொடர்ந்தும் விரிவடைந்ததுடன் ஒழுங்குமுறைப்படுத்தலின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கு மிக மேலாக மூலதனத்தையும் திரவத்தன்மையையும் பேணிய அதேவேளையில் அதன் மூலம் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை உறுதிப்படுத்தியது.** கொடுகடன் மற்றும் முதலீட்டுச் சொத்துப் பட்டியல்களை உள்ளடக்கிய வங்கித்தொழில் துறையின் சொத்துத்தளம் வைப்புக்களினால் பெரும்பாலும் நிதியிடப்பட்டதுடன் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. 2017இன் செயலாற்றத்துடன் ஒப்பிடும்போது சொத்துக்களின் வளர்ச்சியானது மெதுவான வேகத்தில் காணப்பட்டபோதும், செயற்படாக் கடன் விகிதத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு சொத்துக்களின் தரத்தில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. உயர்ந்த தேறிய வட்டிவருமானம் மற்றும் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி இலாபங்களின் காரணமாக முதல் எட்டு மாத காலப்பகுதியில் துறையின் இலாபத் தன்மையானது மேம்பட்டது. இக்காலப்பகுதியில் கிளை மற்றும் தன்னியக்க கூற்றுப்பொறி வலையமைப்பின் விரிவாக்கத்தினூடாக மேம்பட்ட நிதியியல் உள்ளடக்கத்துக்கு வங்கித்தொழில் துறை தொடர்ந்தும் பங்களித்தது. மேலும், பாசல் III கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலானது வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை மேலும் மேம்படுத்தும். அத்துடன், பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகளின் பின்பற்றலும் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை அதிகரிப்பதற்கு காரணங்களாக அமைந்தன.


- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துக்களிலான வளர்ச்சியானது 2017இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது மெதுவடைந்தது.** 2018இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியிலான 9.4 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 7.3 சதவீதத்தினால் ரூ.11.0 ரில்லியனுக்கு விரிவடைந்தன. இச்சொத்துக்களிலான அதிகரிப்பானது முக்கியமாக கடன்கள் மற்றும் முற்பணங்களிலான அதிகரிப்பினால் பங்களிக்கப்பட்ட அதேவேளை முதலீடுகளிலான மெதுவடைவானது வங்கித்தொழில்துறையின் சொத்துத் தளத்தின் விரிவாக்கத்தைப் பாதித்தது. வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளமானது முக்கியமாக ரூ.8.1 றில்லியன் பெறுமதியான வைப்புக்களினாலும் ரூ.1.5 ரில்லியன் பெறுமதியான கடன்பாடுகளினாலும் நிதியிடப்பட்டது. 2017 இறுதியிலான 13.8 சதவீதத்திலிருந்து 2018 யூன் இறுதியளவில் 11.1 சதவீதத்திற்கு மெதுவடைந்த சொத்துக்களிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2018 ஓகத்து இறுதியளவில் 11.5 சதவீதத்தை அடையும் விதத்தில் சிறிதளவால் உயர்வடைந்தது.

வரைபடம் 8.1
வங்கித்தொழில் துறைக் குறிகாட்டிகள்




மூ.போ.வி. - மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்
சொ.மீ.வ.(வ.மு.) - சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்னர்)
மொ.சொ.ஆ.வ. - மொத்தச் சொத்துக்களின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி
மொ.செ.க.வி. - மொத்த செயற்படாக் கடன் விகிதம்
நி.தி.சொ.வி. - நியதித் திரவச் சொத்துக்கள் விகிதம்


வரைபடம் 8.2
வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட நாணய மற்றும் பேரண்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தி ஆண்டுக்காண்டு கொடுகடன் வளர்ச்சியானது 2017இன் பிற்பகுதியிலிருந்து 2018 ஓகத்து இறுதிவரை அதன் மெதுவடையும் போக்கைத் தொடர்ந்தது.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் கொடுகடனிலான வளர்ச்சியானது 2017இன் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடும்போது அதிகரித்தது. 2018 இன் முதல் எட்டு மாத காலப்பகுதியிலான கொடுகடன் வளாச்சியானது 10.5 சதவீதமாக அமைந்து 2018 ஓகத்து இறுதியளவில் ரூ.7.1 ரில்லியனை அடைந்ததுடன் வளர்ச்சியானது அதிகரிப்பின் 74.0 சதவீதத்திற்கு வகைகூறிய ரூபாக் கடன்களினால் தூண்டப்பட்டதுடன் இது இக்காலப்பகுதியில் 9.5

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சதவீத வளர்ச்சியை அறிக்கையிட்டது. 2017 இறுதியிலான 16.1 சதவீதத்திலிருந்து 2018 யூன் இறுதியில் 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த கொடுகடனிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2018 ஓகத்து இறுதியளவில் 15.7 சதவீதத்தையடைந்து ஓரளவு மீட்சியைக் காட்டியது. கடன்கள் மற்றும் முற்பணங்களிலான வளர்ச்சியானது தனியார் துறை மற்றும் அரசுடமை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகரித்த கடன்வழங்கல் மூலம் தூண்டப்பட்ட அதேவேளை, இக்காலப்பகுதியில் மத்திய அரசுக்கான கடன்வழங்கல் வீழ்ச்சியடைந்தது. சாதனங்களின் நியதிகளில், மேலதிகப் பற்றுக்களும் தவணைக் கடன்களும் இக்காலப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சியின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. இதன்படி, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மேலதிகப் பற்றுக்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 8.0 சதவீதமான (ரூ.70.5 பில்லியன்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 18.4 சதவீதத்தினால் (ரூ.133.6 பில்லியன்) அதிகரித்தன. அதேவேளை, தவணைக் கடன்களிலான வளர்ச்சியானது 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியின் 14.5 சதவீதத்திலிருந்து 2018இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில 10.3 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அடகு மற்றும் குத்தகை மூலமான கொடுகடனானது 2017இன் தொடர்பான காலப்பகுதியின் முறையே 8.7 சதவீத மற்றும் 3.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முறையே 8.1 சதவீதத்தினாலும் 9.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. அதேவேளை வங்கித்தொழில் துறையின் கொடுகடனானது முக்கியமாக நுகர்வு (19.7 சதவீதம்), மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் (16.1 சதவீதம்), கட்டுமானம் (13.9 சதவீதம்), தயாரிப்பு (10.2 சதவீதம்) மற்றும் வேளாண்மை, காட்டுத் தொழில் மற்றும் மீன்பிடி (8.3 சதவீதம்) ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. கொடுகடனானது முக்கியமாக ஐந்து பொருளாதார துறைகளுக்கு செறிந்திருந்த போதும் தனிப்பட்ட வங்கிகள் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட துறைகளுக்கிடையில் தமது வியாபாரத்தை பல்வகைப்படுத்தியிருந்தன.

- **வியாபாரச் சொத்துப்பட்டியலிலுள்ள அரச பிணையங்களின் முதலீடுகளிலான வீழ்ச்சியின் முக்கிய காரணத்தால் 2018இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் முதலீட்டு வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முதலீடுகளிலான அதிகரிப்பானது 2017 இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.296.2 பில்லியனுடன் (13.0 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ.29.8 பில்லியனாக (1.2 சதவீதம்) இருந்தது.

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் நிதியிடல் மூலங்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

முதலீடுகளிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி 2017இன் பிற்பகுதியில் அதிகரித்து 2017 இறுதியில் 12.5 சதவீதமாக விளங்கியதெனினும் இது 2018 ஒகத்து இறுதியளவில் 0.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் வியாபாரச் சொத்துப் பட்டியலில் திறைசேரி முறிகள் ரூ. 23.7 பில்லியன் அதிகரிப்பை அறிக்கையிட்ட அதேவேளை இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முறையே ரூ.21.8 பில்லியன் மற்றும் ரூ.15.4 பில்லியன் அளவான வீழ்ச்சியை அறிக்கையிட்டன. இக்காலப்பகுதியில் முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் சொத்துப்பட்டியலிலான முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன அதிகரிப்பை அறிக்கையிட்டதுடன் திறைசேரி முறிகள் வீழ்ச்சியடைந்தன.


- **வங்கித்தொழில் துறையின் விரிவாக்கமானது பெருமளவிற்கு வைப்புக்களினால் நிதியிடப்பட்டதுடன் இது 2018 ஒகத்து இறுதியில் மொத்தச் சொத்துக்களின் 73.3 சதவீதத்திற்கு வகைகூறியது.** வங்கித்தொழில் துறையின் வைப்புத் தளமானது 9.3 சதவீத வளர்ச்சியுடன் ரூ.689.6 பில்லியனால் வளர்ச்சியடைந்ததுடன் முக்கியமாக ரூபா வைப்புக்களை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, முன்னைய ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் தவணை வைப்புக்களில் குறைந்தளவான அதிகரிப்பு அவதானிக்கப்பட்ட அதேவேளை கேள்வி மற்றும் சேமிப்பு வைப்புக்களிலான அதிகரிப்பானது தொடர்பான முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது இக்காலப்பகுதயில் உயர்வாக இருந்தது. எனினும், 2018 ஒகத்து இறுதியிலுள்ளவாறு மொத்த வைப்புக்களின் சதவீதமாக நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் பங்கானது 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 33.5 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 32.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருந்தபோதிலும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கடன்பெறுகைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியிலான ரூ. 92.2 பில்லியன் பெறுமதியான (5.4 சதவீத எதிர்மறை வளர்ச்சி) வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.58.9 பில்லியனால் வீழ்ச்சியடைந்து 3.7 சதவீதமான எதிர்மறையான வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் 13.7 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 898.6 மில்லியன்) வீழ்ச்சியடைந்தமையின் முக்கிய காரணத்தினால் கடன்பெறுகைகள் வீழ்ச்சியடைந்ததுடன் இதில் 78.2 சதவீதமான வீழ்ச்சியானது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் அறிக்கையிடப்பட்டது.

வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.6
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை நிலைமை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

அதேவேளை 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதயில் வங்கிகளினால் பாசல் ஐஐஐ இணங்குவிப்பு தொகுதிக்கடன்களை வழங்குவதனூடாக திரட்டப்பட்ட ரூ.33.3 பில்லியன் மற்றும் ரூ.16.6 பில்லியன் பெறுமதியான மீள்கடன் பெறுகைகளின் தீர்ப்பனவின் தேறிய விளைவின் காரணமாக ரூபா கடன்பெறுகைகள் 2.5 சதவீதத்தினால் (ரூ.14.8 பில்லியன்) அதிகரித்தன.

- **சொத்துத்தரம் தேய்வடைந்தது, எனினும் முகாமை செய்யக்கூடியதாகவிருந்தது**. செயற்படாக் கடன்கள் 2017 இறுதியின் ரூ. 160.7 பில்லியனிலிருந்து 2018 ஓகத்து இறுதியில் ரூ.254.6 பில்லியனுக்கு ரூ.93.9 பில்லியனால் அதிகரித்து, செயற்படாக்கடன் விகிதம் 2017 திசெம்பர் இறுதியின் 2.5 சதவீதத்திலிருந்து 2018 ஓகத்து இறுதியளவில் 3.6 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு காரணமாகியது. செயற்படாக் கடனிலான அதிகரிப்பானது 2014 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் நிலவிய 4.0 சதவீதத்திலிருந்து 6.0 சதவீதம் வரையான செயற்படாக்கடன் விகிதத்துடன் ஒப்பிடுகையில் இன்னமும் முகாமை செய்யக்கூடியதாகவே இருக்கின்றது. 2018 யூன் இறுதியிலுள்ளவாறு உயர்ந்தபட்ச செயற்படாக்கடன் விகிதங்கள் சுற்றுலா (5.5 சதவீதம்), தயாரிப்பு (5.4 சதவீதம்), தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பூட்டல் பணிகள் (5.1 சதவீதம்), மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் (4.7 சதவீதம்) மற்றும் வேளாண்மை, காட்டுத் தொழில் மற்றும் மீன்பிடி (4.4 சதவீதம்) ஆகிய துறைகளில் அறிக்கையிடப்பட்டன. எனினும், மேலதிக ஏற்பாடுகளைத் தேவைப்படுத்தாத சிறப்பாகக் குறிப்பிடத்தக்க வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட புதிய செயற்படாக் கடனின் காரணமாக ஏற்பாடுகளிலான அதிகரிப்பானது செயற்படாக் கடன்களிலான அதிகரிப்பை ஈடுசெய்யப் போதுமானதாக இல்லாமையால் சிறப்பு மற்றும் மொத்த ஏற்பாட்டு உள்ளடக்க விகிதங்கள் 2017 ஓகத்து இறுதியிலிருந்தவாறான முறையே 48.0 சதவீதம் மற்றும் 66.2 சதவீதத்திலிருந்து 2018இல் முறையே 38.6 சதவீதம் மற்றும் 52.2 சதவீதத்திற்கு மோசமடைவதற்கு வழிவகுத்தது.

- **வங்கித்தொழில் துறையானது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலாக போதுமான திரவத்தன்மை தாங்கிருப்புடன் தொழிற்பட்டது**. 2018 ஓகத்து இறுதியில் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு ஆகியவற்றை நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம் முறையே 30.0 சதவீதமாகவும் 40.5 சதவீதமாகவும் அமைந்து குறைந்தபட்ச நியதிச்சட்டத் தேவைப்பாடான 20 சதவீதத்திற்கு மிக மேலாக விளங்கிய அதேவேளை, திரவச் சொத்துக்களுக்கான மொத்தச் சொத்துக்கள் விகிதம் 2018 ஓகத்து இறுதியில் 27.4 சதவீதமாக இருந்தது. கடனுக்கான வைப்புக்கள் விகிதம் 2017 ஓகத்து இறுதியில் இருந்தவாறான 86.9 சதவீதத்திலிருந்த 2018 ஓகத்து இறுதியில் 87.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. வங்கித்தொழில் தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மை உள்ளடக்க விகிதங்கள் 2018 ஓகத்து இறுதியில் முறையே 185.4 சதவீதம் மற்றும் 151.2 சதவீதமாக இருந்து ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத் தேவைப்பாடான 90 சதவீதத்திற்கு மிக மேலாகக் காணப்பட்டன.

அட்டவணை 8.1

வங்கித்தொழில் துறை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2016 ஓகத் முடிவில் | 2017 ஓகத் முடிவில் | 2017 திசெ முடிவில் | 2018 ஓகத் முடிவில் (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 ஓகத் | 2018 ஓகத் (அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 8,624 | 9,901 | 10,292 | 11,040 | 14.8 | 11.5 |
| கடன்களும் முற்பணங்களும் (ரூ.பில்லியன்) | 5,092 | 6,140 | 6,431 | 7,104 | 20.6 | 15.7 |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 2,428 | 2,588 | 2,577 | 2,608 | 6.6 | 0.8 |
| வைப்புக்கள் (ரூ.பில்லியன்) | 5,855 | 7,063 | 7,399 | 8,089 | 20.6 | 14.5 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்லியன்) | 1,758 | 1,604 | 1,607 | 1,548 | -8.8 | -3.5 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்லியன்) | 683 | 823 | 867 | 959 | 20.5 | 16.5 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) (ஆ) | 12.2 | 12.3 | 12.4 | 12.7 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) (ஆ) | 14.7 | 15.1 | 15.2 | 15.8 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 3.0 | 2.8 | 2.5 | 3.6 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 1.1 | 0.9 | 0.8 | 1.7 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) | 1.9 | 2.0 | 2.0 | 1.9 | | |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) | 16.9 | 17.6 | 17.6 | 14.6 | | |
| நியதித் திரவச்சொத்துக்களின் விகிதம் (உள்நாட்டு வங்கிப் பிரிவு) (%) | 31.4 | 31.2 | 31.3 | 30.0 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 29.2 | 29.0 | 28.8 | 27.4 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) யூன் முடிவில் உள்ளவாறு

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


8

- **வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையானது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களிலான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கூடிய வீதத்தில் அதிகரித்த வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் காரணத்தினால் 2017 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2018 யூன் இறுதியளவில் அதிகரித்தன.** 2018இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட ஐந்தொகையிலான சொத்துக்களின் அதிகரிப்பிற்கு வங்கிகளுடனான வைத்திருப்புக்கள் மற்றும் முதலீடுகளிலான அதிகரிப்புக் காரணமாக இருந்தவேளை, முன்னோக்கிய விற்பனைகளின் முக்கிய காரணத்தினால் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் அதிகரித்தன. 2018 யூன் இறுதியில் வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் மற்றும் ஐந்தொகை வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையானது முறையே 2.4 சதவீதமாகவும் 2.0 சதவீதமாகவும் காணப்பட்டது. வங்கித்தொழில் துறை 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 129.5 மில்லியனான கொள்வனவு நிலைமையுடன் ஒப்பிடும் போது 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 150.2 மில்லியனான கொள்வனவு வெளிநாட்டு நாணய நிலைமையை அறிக்கையிட்டது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீடுகள் தொடர்பில் ரூ.12.9 பில்லியன் பெறுமதியான தேறிய இலாபம் காணப்பட்டது.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபமானது ரூ.1.8 பில்லியனாக விளங்கியதுடன் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.3.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தது.** இதற்கு 2018இன் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2017இன் முதல் எட்டு மாதங்களில் அரச பிணையங்களின் வட்டி வீதங்களில் உயர்ந்தளவு தளம்பல்தன்மை அவதானிக்கப்பட்டமையே காரணமாகும். வங்கிகளின் வியாபார சொத்துப்பட்டியலின் பங்குரிமைச் சந்தைக்கான வெளிப்படுத்துகை ரூ.19.1 பில்லியனாகவும் இது 2018 ஓகத்து இறுதியில் முறையே வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகளின் முறையே 0.17 சதவீதமாகவும் 3.0 சதவீதமாகவும் மட்டுமே காணப்பட்டமையால் வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு மிகக் குறைந்தளவாகவே காணப்பட்டது.


- **வங்கித்தொழில் துறையின் 2017ஆம் ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபமானது ரூ.138.9 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2018இன் முதல் எட்டு மாதங்களுக்கு இது ரூ.87.0 பில்லியனாக விளங்கியதுடன் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.86.6 பில்லியனான இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது ரூ.0.4 பில்லியனால் அதிகரித்திருந்தது.** இலாபத்திலான அதிகரிப்புக்கு தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டியல்லா வருமானம் என்பன முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் முறையே ரூ.37.3 பில்லியனாலும் ரூ.7.2 பில்லியனாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். எனினும், இது, 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் எட்டு

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய்




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.8
வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமாந்தன்மை




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

8

மாத காலப்பகுதியில் முறையே ரூ.23.3 பில்லியனாலும் ரூ.10.2 பில்லியனாலும் அதிகரித்த வட்டியல்லாச் செலவினம் மற்றும் கடன் இழப்பு ஏற்பாடுகளினால் எதிரீடு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் ரூ.0.7 பில்லியன் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் ரூ.5.9 பில்லியன் பெறுமதியான குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தில் காணப்பட்டது.

- **இலாபத்தில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்புக்கிடையிலும் இலாப விகிதங்கள் சிறிதளவால் தேய்வடைந்தன.** வரிக்கு முன்னரான சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் வரிக்குப் பின்னரான பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் என்பன 2017 ஒகத்து இறுதியின் 2.0 சதவீதம் மற்றும் 17.6 சதவீதத்திலிருந்த 2018 ஒகத்து இறுதியில் முறையே 1.9 சதவீதத்திற்கும் 14.6 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. எனினும், இக்காலப்பகுதியில் தேறிய வட்டி வருமானம் 3.5 3.7 சதவீதத்திற்கு 20 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தது. தொழிற்பாட்டுச் செலவிலான அதிகரிப்பானது வினைத்திறன் விகிதம் 2017 ஒகத்து இறுதியின் 46.2 சதவீதத்திலிருந்து 2018 ஒகத்து இறுதியில் 48.5 சதவீதத்திற்கு மோசமடைவதற்கு வழிவகுத்தது.


- **வங்கித்தொழில் துறை ஏதேனும் மோசமான அதிர்வுகளைத் தாங்கும் பொருட்டு போதுமான மூலதனத்தை 2018இன் முதலரைப்பகுதியில் பேணியது.** 2018 யூன் இறுதியளவில், வங்கித்தொழில் துறையானது 12.7 சதவீதமான பங்குரிமை விகிதத்தோடும் 15.8 சதவீதமான மொத்த மூலதன விகிதத்தோடும் பாசல் III தேவைப்பாடுகளுக்கு மிக மேலாகத் தொழிற்பட்டது. எனினும், நடுத்தர காலத்தில், பாசல் III இன் கீழான உயர்த்தப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதிகளைத் திரட்டுவதிலும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவதன் தாக்கத்தை எதிர்கொள்வதிலும் வங்கிகள் சவால்களை எதிர்நோக்கக்கூடும்.

- **2018இன் முதலரைப்பகுதியில் வங்கிக் கிளை வலையமைப்பு மேலும் விரிவடைந்து நிதியியல் அணுகலை மேம்படுத்தியது.** இதன்படி, 2018இன் முதலரைப்பகுதியில் 14 புதிய கிளைகள் திறக்கப்பட்டதுடன் 304 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் நிறுவப்பட்டன. அதேவேளை, இக்காலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தக வங்கியொன்றாக பாங்க் ஒவ் சைனா லிமிடெட் இற்கு புதிய வங்கித்தொழில் உரிமம் வழங்கப்பட்டது.

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை

- உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி துறை இலங்கையின் நிதியியல் முறைமைகளின் சொத்துக்களில் 8.0 சதவீதத்தினை பிரதிபலித்ததுடன் 1,355 கிளைகளுடன் 43 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் 5 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.


வரைபடம் 8.9
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் குறிகாட்டிகள்




மூ.போ.வி. - மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்
சொ.மீ.வ.(வ.மு.) - சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்னர்)
மொ.சொ.ஆ.வ. - மொத்தச் சொத்துக்களின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி
உ.பெ.நி.க. - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
மொ.செ.க.வி. - மொத்த செயற்படாக் கடன் விகிதம்
மொ.சொ.தி.சொ. - மொத்தச் சொத்துக்களுக்குத் திரவச் சொத்துக்கள்
சி.வா.கு.க. - சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்

வரைபடம் 8.10


உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனித் துறையின் மொத்த வைப்புக்கள் மற்றும் கடன்பெறுகைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.11

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனித் துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **துறை விரிவாக்கம் மெதுவடைந்தது.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மெதுவடைந்த மொத்த சொத்தின் விரிவாக்கம் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட 7.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீத வளர்ச்சி வீதம் (ரூ.51.4 பில்லியன்) ஒன்றினை பதிவுசெய்ததுடன் ரூ.1,406.7 பில்லியனை அடைந்தமைக்கு குறைந்த கொடுகடன் வளர்ச்சி, ஒரு இடர்பாட்டிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மூலம் கணிசமானளவு விற்பனைக்குள்ளான சொத்துக்களின் காரணமாக முதலீட்டு சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட குறைவு மற்றும் கிடைக்கத்தக்கதாகவுள்ள திரவச் சொத்துக்களின் வீழ்ச்சி என்பனவையே காரணமாகக் காணப்பட்டது.

- **துறை கலப்பு நிதியிடலில் ஒரு தொடர்ச்சியான மாற்றத்தை நிரூபிக்கின்றது.** துறையின் மொத்த சொத்துக்களின் 42.0 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வைப்பு இன்னும் ஆதிக்கம் செலுத்திய போதிலும் துறை விரிவாக்கம் கலப்பு நிதியிடலில் மாற்றத்தின் அறிகுறிகளைக் காட்டும் கடன்பாடுகளினூடாகவே பாரியளவு நிதியளிக்கப்பட்டிருந்தது. கடன்பாடுகள், 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட எதிர்மறை வளர்ச்சியிலிருந்து ஒரு மாற்றத்தை 2018இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் 8.8 சதவீதம் (ரூ.34.9 பில்லியன்) வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. வைப்பு வளர்ச்சி 2017இன் தொடர்பான காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட 19.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் எட்டு மாதத்தில் 1.1 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பில் நெகிழ்ச்சித்தன்மையினையும் எதிர்மறையான பொதுமக்களின் மனஉணர்வுகளின் காரணமாக இத்துறை வைப்புக்கள் தொடர்பில் பரிசீலனையில் கொண்டு வங்கிக் கடன்பாடுகளில் பெருமளவிற்குத் தங்கியிருந்தமையினை எடுத்துக்காட்டியது. இது வைப்பக்களூடாக நிதியினைத் திரட்டுவதில் மெதுவான தன்மையினைத் தோற்றுவித்தது.

அட்டவணை 8.2

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2016 ஓகத் முடிவில் | 2017 ஓகத் முடிவில் | 2017 திசெ முடிவில் | 2018 ஓகத் முடிவில் (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 ஓகத் | 2018 ஓகத் (அ) |
| மொத்தச் சொத்துக்கள் - தேறிய (ரூ.பில்லியன்) | 1,140 | 1,307 | 1,355 | 1,406.4 | 14.7 | 7.6 |
| கடன்களும் முற்பணங்களும் - தேறிய (ரூ.பில்லியன்) | 900 | 1,020 | 1,057 | 1,125.0 | 13.4 | 10.3 |
| வைப்புக்கள் (ரூ.பில்லியன்) | 506 | 636 | 687 | 693.9 | 25.6 | 9.2 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்லியன்) | 408 | 413 | 396 | 430.9 | 1.2 | 4.3 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்லியன்) | 142 | 164 | 167 | 184.1 | 15.2 | 12.2 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 12.0 | 12.6 | 12.4 | 9.6 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 12.6 | 13.3 | 13.1 | 11.1 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 5.5 | 5.5 | 5.9 | 6.9 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 1.3 | 1.3 | 1.6 | 2.2 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) - ஆண்டிற்கான | 3.7 | 3.0 | 3.0 | 2.8 | | |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) - ஆண்டிற்கான | 20.0 | 14.9 | 14.7 | 12.9 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 7.0 | 8.5 | 8.9 | 7.5 | | |


(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

வரைபடம் 8.12


**உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனித் துறையின் செயற்படாக் கடன்கள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.13

**உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனித் துறையின் மொத்த திரவச் சொத்துக்கள் மற்றும் திரவத்தன்மை விகிதம்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **கொடுகடன் வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமைக்கு பேரண்ட முன்மதியுடைய கொள்கைககள் மற்றும் மெதுவடைந்த பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களே முக்கிய காரணங்களாகும்.** ஊர்திகளுக்கான கடன்கள் மீது நடைமுறைப்படுத்தப்பட்ட பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் துறையின் கடன்வழங்கல் நடவடிக்கைகள் மெதுவடைந்துசெல்லும் போக்கிற்கான அறிகுறிகளைக் காட்டின. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 5.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.4 சதவீதத்தினால் (ரூ.67.9 பில்லியன்) ரூ.1,125.0 பில்லியனுக்கு சிறிதளவால் வளர்ச்சியடைந்தது.


- **செயற்படாக் கடன்களின் அதிகரித்த போக்குத் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.** மொத்த செயற்படாக் கடன் விகிதம் 2017 திசெம்பர் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 5.9 சதவீதத்திலிருந்து 2018 ஓகத்து இறுதியில் 6.9 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு வெள்ளப்பெருக்கு, நாடு முழுவதிலும் காணப்பட்ட வரட்சி மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மெதுவடைந்த போக்கு என்பன முக்கிய காரணங்களாக காணப்பட்டன. இது 2015 பெப்புருவரியின் பின்னர் பதிவுசெய்யப்பட்ட அதியுயர்ந்த விகிதம் ஆகும். மேலும், ஏற்பாட்டு உள்ளடக்கு விகிதம் 2017 திசெம்பர் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 61.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஓகத்து இறுதியில் 54.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, தேறிய செயற்படாக் கடன் விகிதம் 2017 திசெம்பர் இறுதியில் அறிக்கையிடப்பட்ட விகிதம் 1.6 சதவீதத்திலிருந்து 2018 ஓகத்து இறுதியில் 2.2 சதவீதமாக அதிகரித்தலானது துறையின் சொத்துத் தரத்தின் சரிவின் அறிகுறிகளைக் காட்டுகிறது. செயற்படாக் கடன் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டமைக்கு தீவிர வானிலை நிலைமைகள் மற்றும் 2018 ஓகத்தில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் நடாத்தப்பட்ட படுகடன் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கசிகின்ற விளைவு என்பன காரணங்களாகக் காணப்படுகின்றன.

- **உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலைமை மிகையொன்றினைப் பதிவுசெய்தது, ஆனால் திரவச் சொத்துக்கள் குறைவடைகின்ற போக்கு ஒன்றினை நிரூபித்தது.** துறையானது ரூ. 110.9 பில்லியன் கொண்ட மொத்தத் திரவச் சொத்துக்களை அறிவித்ததுடன் இது குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடான ரூ.89.2 பில்லியனுக்கெதிராக ரூ.21.7 பில்லியன் கொண்ட மிகையான திரவத்தன்மை 2018 ஓகத்தில் காணப்பட்டது. எனினும், திரவ விகிதம் (வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான திரவச் சொத்துக்கள்) 2017 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீத விகிதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஓகத்தில் 9.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. விகிதத்தினது வீழ்ச்சிக்கு 12.3 சதவீதத்தினால் கிடைக்கத்தக்கதாகவுள்ள திரவச் சொத்துக்களின் குறைப்பு காரணமாகியது.

- **மூலதன நிலை மேம்பட்டது.** மொத்த ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலதன மட்டங்கள் 2017 திசெம்பர் இறுதியில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2018 ஓகத்தில் ரூ.13.6 பில்லியனால் மேம்படுத்தப்பட்டமைக்கு இலங்கை மத்திய வங்கியினால் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு 2018.01.01 இலிருந்து ரூ.1 பில்லியனுக்கும் 2019.01.01இல் ரூ.1.5 பில்லியனுக்கும்


8

வரைபடம் 8.14
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனித் துறையின் மூலதன நிலைமை




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.15
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனித் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்கு மூலதனம் மீதான வருவாய்




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

2020.01.01இல் ரூ.2.0 பில்லியனுக்கும் 2021.01.01இல் ரூ.2.5 பில்லியனுக்கும் விரிவுபடுத்தியமையே முக்கிய காரணமாகும். எனினும், அதிகூடிய இடர்நேர்வு உணர்வுகள் மீது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களை அறிக்கையிடுவதற்கு இருக்கின்ற கம்பனிகள் புதிய மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் கீழ் கொடுகடன் இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை உள்ளடக்கி கவனம் செலுத்தியதால், துறை மைய மூலதனம் மற்றும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதங்கள் 2017 திசெம்பர் இறுதியில் 12.4 சதவீதமாகவும் 13.1 சதவீதமாகவும் அறிக்கையிடப்பட்ட அளவுகளிலிருந்து 2018 ஓகத்து இறுதியில் 9.6 சதவீதத்திற்கும் 11.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. எனினும், பலயீனமான நிதியியல் நிலைமைகளினால் குறைந்தபட்சத் தேவைப்படுத்தப்பட்ட மட்டங்களுக்குக் கீழே மைய மூலதனத்தினையும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தினையும் கொண்டிருந்த ஒரு சில கம்பனிகள் அப்பிரச்சனைகளைச் சீர்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

- **இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தமைக்கு நிதியிடல் செலவு மற்றும் செயற்படாக் கடன்களின் உயர்வு என்பவற்றின் அதிகரிப்பு முக்கிய காரணமாகும்.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் இலாபம் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.17.6 பில்லியனுடான இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.15.5 பில்லியனாகப் பதிவுசெய்தது. மீளாய்வு செய்யப்பட்ட காலத்திற்கான துறை இலாபம் குறைவடைந்தமைக்கு அதிகரித்த நிதியிடல் செலவு மற்றும் கடனிழப்பு ஏற்பாடுகளின் அதிகரிப்பு என்பனவையே முக்கிய காரணமாகும். 2018 ஓகத்து இறுதியில் வருடாந்த சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 3.0 சதவீதம் மற்றும் 14.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 2.8 சதவீதமாகவும் 12.9 சதவீதமாகவும் காணப்பட்டன.

## முதனிலை வணிகர்கள்

- **முதனிலைவணிகர் தொழிற்துறையின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்தச் சொத்துப்பட்டியல் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் குறைவடைந்தது.** முதனிலை வணிகர் தொழில்துறையின் மொத்தச் சொத்துக்கள் 2018இல் 16.1 சதவீதத்தினால் ரூ.359.4 பில்லியனுக்கு குறைவடைந்ததுடன் முதனிலைவணிகர்களிடம் வசமிருந்த அரச பிணையங்களில் மொத்தச் சொத்துப் பட்டியல் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 11.6 சதவீதத்தினால் ரூ.348.2 பில்லியனுக்குக் குறைவடைந்தது. இவ்வீழ்ச்சி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் குறைவடைவதற்கு முக்கிய காரணமாகக் காணப்பட்டது. மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் கீழான கடன்பாடுகள் 2017 ஓகத்து இறுதியுடன் ஒப்பிடுகையில் 2018 ஓகத்து இறுதியில் ரூ. 68.5 பில்லியனுக்கு 118.8 சதவீதத்தினால் கடுமையான வீழ்ச்சியைக் காட்டியது.

- **இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தது.** சொத்து மீதான வருவாய் மற்றும் மூலதனத்தின் மீதான வருவாயின் நியதிகளில் அளவிடப்பட்ட தனியான முதனிலை வணிகர்களின் முதனிலை வணிகர் தொழில்துறையின்

8

அட்டவணை 8.3

முதனிலை வணிகர்கள் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2016 ஓகத் முடிவில் | 2017 ஓகத் முடிவில் | 2017 திசெ முடிவில் | 2018 ஓகத் முடிவில் (அ)(ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 ஓகத் | 2018 ஓகத் (அ)(ஆ) |
| **மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்)** | **311.8** | **418.3** | **337.2** | **359.4** | **34.2** | **(14.1)** |
| தனியான முதனிலை வணிகர்கள் | 87.5 | 67.6 | 77.3 | 73.9 | (22.7) | 9.2 |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 224.4 | 350.7 | 259.9 | 285.5 | 56.3 | (18.6) |
| **மொத்தச் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்)** | **256.0** | **393.8** | **314.2** | **348.2** | **53.2** | **(11.6)** |
| தனியான முதனிலை வணிகர்கள் | 41.3 | 50.6 | 62.6 | 67.3 | 22.4 | 33.0 |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 214.6 | 343.2 | 251.6 | 280.9 | 59.9 | (18.2) |
| **மொத்த மூலதனம் (ரூ.பில்லியன்) (இ)** | 19.5 | 23.2 | 23.1 | 11.9 | 19.3 | (48.6) |
| **வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்) (ஈ)** | **11.1** | **10.2** | **15.1** | **8.9** | **(7.7)** | **(12.7)** |
| தனியான முதனிலை வணிகர்கள் | 7.4 | 2.3 | 3.1 | 1.4 | (69.2) | (37.6) |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 3.7 | 8.0 | 11.9 | 7.5 | 114.8 | (5.6) |
| **அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) (இ)** | 33.7 | 57.4 | 54.9 | 21.5 | 23.7 | (35.9) |
| **மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம (%) (இ)** | 35.0 | 58.8 | 55.9 | 22.3 | 23.8 | (36.5) |
| **சொத்துக்கள் மீதான வருவாய (%)** | 5.7 | 3.9 | 4.0 | 3.9 | (1.8) | - |
| தனியான முதனிலை வணிகர்கள் | 13.3 | 4.6 | 4.2 | 2.9 | (8.7) | (1.4) |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 2.7 | 3.8 | 3.9 | 4.2 | 1.1 | 0.4 |
| **பங்கு மூலதனம் மீதான வருவாய் (%) (இ)** | 66.1 | 16.9 | 14.9 | 16.7 | (49.2) | (0.2) |
| **நிறைவேற்றும் காலங்கள் (இ)** | 3.5 | 1.9 | 2.3 | 5.1 | (1.6) | 3.2 |
| **மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவுகள் (%) (ஈ)** | **6.4** | **7.7** | **7.9** | **7.7** | **1.3** | - |
| தனியான முதனிலை வணிகர்கள் | 8.3 | 24.8 | 26.8 | 30.8 | 16.5 | 6.0 |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 2.5 | 1.4 | 1.3 | 1.4 | (1.1) | - |
| **மொத்த வருமானத்திற்கான மொத்தச் செலவினம் (%) (ஈ)** | **54.1** | **64.0** | **63.2** | **59.4** | **9.9** | **(4.6)** |
| தனியான முதனிலை வணிகர்கள் | 36.5 | 64.0 | 64.9 | 73.8 | 27.5 | 9.8 |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 71.5 | 64.1 | 62.7 | 59.4 | (7.4) | (4.7) |
| **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கால அளவு (வருடங்கள்)** | 1.3 | 1 | 1 | 2.4 | (23.1) | 140.0 |
| தனியான முதனிலை வணிகர்கள் | 3.0 | 2.4 | 1.9 | 5.7 | (20.0) | 136.7 |
| வங்கி முதனிலை வணிகர்கள் | 0.6 | 0.4 | 0.3 | 0.4 | (33.3) | - |

(அ) தற்காலிகமானது
(ஆ) பெர் பெட்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட்டின் நிதித்தரவுகள் உள்ளடக்கப்படவில்லை
(இ) தனியான முதனிலை வணிகர்கள் மட்டும்
(ஈ) காலப்பகுதியில்
குறிப்பு: என்றஸ்ட் செக்குரிட்டிஸ் பிஎல்சியின் நிதித்தரவுகளை உள்ளடக்கப்படவில்லை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இலாபத்தன்மை 2018இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் முறையே 2.9 சதவீதத்திலும் 16.7 சதவீதத்திலும் காணப்பட்டது. ஒட்டுமொத்தமாக 2018 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் முதனிலை வணிகர் தொழில்துறை 2017இன் தொடர்பான அதே காலப்பகுதியில் இலாபமான ரூ.10.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.8.9 பில்லியன் இலாபத்தைப் பதிவு செய்தது. முதனிலை வணிகர் தொழில்துறை 2018 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதிக்கான ரூ.1.2 பில்லியனைப் பதிவுசெய்த மொத்த இலாபங்கள் (தேறல் செய்யப்பட்டவை மற்றும் தேறல் செய்யப்படாதவை) 2017இன் தொடர்பான காலப்பகுதியில் ரூ.3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2017.07.06 யூலை அன்று பேப்பர்சுவல் ரெசரீஸ் லிமிடெட்டின் வணிக நடவடிக்கைகளின் இடைநிறுத்தம் ஒட்டுமொத்த தொழில்துறையின் இலாபத்தன்மை மற்றும் மொத்த சொத்துக்கள் மீது எதிர்மறையான தாக்கத்தை கொண்டிருந்தது.

- **மூலதனம் ஆரோக்கியமான மட்டமொன்றில் பேணப்பட்டது.** 2018 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு அனைத்துத் தனியான முதனிலை வணிகர்கள்[1] தமது மைய மூலதனத்தினை ரூ.1,000 மில்லியன் கொண்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டிற்கு மேலேயே பேணின. தொழில்துறையின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்சத்திற்கு மேலாக இருந்ததுடன் விகிதமானது 2017 ஓகத்து இறுதியில் பதிவுசெய்த 58.8 சதவீதத்திலிருந்து 2018 ஓகத்து இறுதியில் 22.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

- **இடர்நேர்வு தோற்றப்பாடு மேம்பட்டது.** மொத்தச் சொத்துப்பட்டியலுக்கு வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் விகிதமாக 2017 ஓகத்து இறுதியின் 33.8 சதவீதத்திலிருந்து 2018 ஓகத்து இறுதியில் 42.8 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் சந்தை இடர்நேர்வுகளுக்குத் தொழில்துறை உள்ளாகும் தன்மையினைக் குறைவடையச் செய்தது. முதனிலை வணிகர்கள் இடர்நேர்வற்ற அரச பிணையங்களைப் பெருமளவு விகிதத்தில் உடமையில் வைத்திருப்பதனையும் எதிர்பாராத திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு அத்தகைய அரசாங்க பிணையங்களைப் பயன்படுத்துவதற்கான முதனிலை

1 தனியான முதனிலை வணிகர்கள் பெர் பெட்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட் மற்றும் என்றஸ்ட் செக்குரிட்டிஸ் பிஎல்சி என்பவற்றை உள்ளடக்கவில்லை

8

வணிகர்கள் இயலாற்றலையும் கொண்டிருப்பதனால் முதனிலை வணிகர்களின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. மேலும், பெரும்பாலான முதனிலை வணிகர்கள், சாத்தியமாகுமிடத்து திரவத்தன்மை இடைவெளியினை நிரப்புவதற்கு துணைநில் எதிர்பாரா நிதியிடல் ஒழுங்குகளையும் கொண்டிருக்கின்றனர்.

## காப்புறுதித் துறை

- **காப்புறுதித் துறையானது சொத்துத் தள நியதிகள் மற்றும் கட்டுப்பண வருமான நியதிகளில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்துள்ளது.** 2018 யூன் இறுதியில், காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துத்தளம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2017இன் அதே காலப்பகுதியின் 11.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 9.1 சதவீதத்தால் அதிகரித்தது. 2018 யூன் இறுதியில், மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2017இன் குறிப்பிட்ட காலப்பகுதியின் 14.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018 யூனில் 12.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஒட்டுமொத்த காப்புறுதித் துறையின் வளர்ச்சிக்கு பொது மற்றும் நீண்ட கால காப்புறுதித் துறைகள் ஒரேயளவில் சமமாகப் பங்களித்துள்ளன. குறிப்பிட்ட காலப்பகுதியில் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதித் துறைகளினதும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2018இல் 12.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. பொதுக் காப்புறுதித் துறையில் 64.4 சதவீதத்தை கொண்டிருக்கும் மோட்டார் காப்புறுதித் துறைக்கான மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2017இன் குறிப்பிட்ட காலப்பகுதியின் 15.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2018 யூன் இறுதியில் தீக் காப்புறுதித் துறையானது 2017இன் 11.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.0 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. ஆரோக்கிய மற்றும் கடல்சார்ந்த காப்புறுதித் துறைகளின் வளர்ச்சி 2017இன் முறையே 15.8 சதவீதம் மற்றும் 7.3 சதவீதத்திலிருந்து 10.6 சதவீதம் மற்றும் 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

- **2018இன் முதலரைப்பகுதியில் காப்புறுதித் துறையின் ஒட்டுமொத்த இலாபம் மேம்பட்டுள்ளது.** 2018இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் வரிக்கு முன்னான மொத்த இலாபமானது 2017இன் அதே காலப்பகுதியின் 10 சதவீதக் குறைவுடன் ஒப்பிடுகையில் 364.7 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது. இக்கணிசமான வளர்ச்சிக்கு நீண்ட கால காப்புறதித் துறையின் இலாப வளர்ச்சியே முக்கியமாகப் பங்களித்து 2017இன் இதே காலப்பகுதியின் 78.5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2,246.6

அட்டவணை 8.4

காப்புறுதித் துறை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2016 யூன் முடிவில் | 2017 யூன் முடிவில் | 2017 திசெ முடிவில் | 2018 யூன் முடிவில் (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 யூன் | 2018 யூன் |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 478.4 | 533.1 | 559.2 | 581.8 | 11.4 | 9.1 |
| **மொத்த வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ)** | **82.1** | **96.6** | **201.6** | **108.1** | **17.7** | **11.8** |
| திரண்ட தவணைக் கட்டண வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ) | 66.8 | 76.2 | 160.4 | 85.8 | 14.0 | 12.6 |
| முதலீட்டு வருமானம் (ரூ.பில்லியன்) (ஆ) | 15.3 | 20.5 | 41.1 | 22.3 | 33.9 | 8.9 |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்) (ஆ) | **5.2** | **4.7** | **24.7** | **21.7** | (10.0) | 364.7 |
| **மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்** (%) **(இ)** | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 296.0 | 358.0 | 336.0 | 310.3 | | |
| பொதுக் காப்புறுதி | 166.0 | 117.0 | 175.7 | 179.5 | | |
| **பிடித்து வைத்தல் விகிதம்** (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 96.2 | 95.9 | 95.9 | 96.0 | | |
| பொதுக் காப்புறுதி | 159.1 | 78.5 | 77.9 | 76.1 | | |
| **கோரல் விகிதம்** (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 37.1 | 36.9 | 29.8 | 44.2 | | |
| பொதுக் காப்புறுதி | 55.7 | 63.9 | 64.3 | 63.7 | | |
| **இணைந்த தொழிற்பாட்டு விகிதம்** (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 85.1 | 86.2 | 80.0 | 98.0 | | |
| பொதுக் காப்புறுதி | 97.2 | 102.9 | 102.7 | 101.4 | | |
| **சொத்துக்கள் மீதான வருவாய்** (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 2.2 | 1.8 | 4.5 | 8.5 | | |
| பொதுக் காப்புறுதி | 2.4 | 8.9 | 4.7 | 5.1 | | |
| **பங்கு மூலதனம் மீதான வருவாய் (%) - பொதுக் காப்புறுதி** | **4.5** | **18.8** | **9.9** | **10.4** | | |
| **ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி** | **15.7** | **17.1** | **17.4** | **18.0** | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்
(இ) 2016இலிருந்து கடன் தீர்ப்பனவு ஆற்றல் விகிதத்திற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

*மூலம்*: இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

சதவீதமாக வளர்ச்சியடைந்தது. இரண்டு காப்புறுதிக் கம்பனிகளின் ஒரு தடவையிலான மிகையின் மாற்றலே இவ்வசாதாரண இலாபத்திற்குக் காரணமாக இருந்தது. ஒரே தடவையிலான இம்மிகையான மாற்றலானது இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தலிற்கு இணங்குவதற்கமைவாக ஆயுள் காப்புறுதி கொள்கை உடமையாளரின் பொறுப்புக்களின் மதிப்பிடல் முறைமையின் மாற்றத்தினால் உருவாக்கப்பட்டது. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் காப்புறுதித் துறையினால் செய்யப்பட்ட கோரல்களைக் கருத்திற்கொள்கையில் பொதுக் காப்புறுதித் துறை மற்றும் நீண்ட காலக் காப்புறுதித் துறை முறையே 10.2 சதவீதம் மற்றும் 34.3 சதவீதத்தால் அதிகரித்தன. 2018இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில், காப்புறுதித் துறையின் முதலீட்டு வருமானம் 2017இன் அதே காலப்பகுதியின் 33.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரையில் 8.9 சதவீத வளர்ச்சியை மட்டுமே பதிவுசெய்துள்ளது. நீண்ட காலக் காப்புறுதித் துறையின் அரச பத்திரங்களின் மீதான முதலீடு அவர்களது மொத்த முதலீட்டின் 47.5 சதவீதமாக இருப்பதுடன் பொதுக் காப்புறுதியின் முதலீடு அவர்களது மொத்த முதலீட்டின் 38 சதவீதமாகக் காணப்படுகிறது.

### கூறு நம்பிக்கைத் துறை

- **2018இன் முதலரைப் பகுதியில் கூறுநம்பிக்கைத் துறையானது தேறிய சொத்துப் பெறுமதி ரீதியில் குறைவடைந்து காணப்பட்டமை அவசியமாக்கப்பட்டது.** கூறு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 1.4 சதவீதத்தால் சிறிதளவால் வளர்ச்சியடைந்ததுடன் கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை மூன்றால் அதிகரித்தது. 2018 யூன் இறுதியில், கூறுநம்பிக்கைத் துறையின் தேறிய சொத்துப் பெறுமதி 2017இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 37.5 சதவீதத்தால் ரூ.64.6 பில்லியனுக்கு குறைவடைந்தது. முதலீட்டை கருத்திற்கொள்ளும் போது, பங்குரிமை மீதான முதலீடு 22.8 சதவீதத்தால் குறைவடைந்ததுடன் அரச பத்திரங்களின் மீதான முதலீடு கணிசமானதாக 87.6 சதவீதத்தால் குறைவடைந்தது.

### பங்குத்தரகுக் கம்பனிகள் துறை

- **2018இன் முதல் அரையாண்டில் பங்குத் தரகர்கள் துறை எதிர்மறையான செயலாற்றத்தைப் பதிவுசெய்தது.** 2018இன் முதலரையாண்டுப் பகுதியில் பங்குத்தரகர்களின் வருமானம் 2017இன் அதே காலப்பகுதியின் ரூ.447.2 மில்லியனிலிருந்து ரூ.384.6 மில்லியனுக்கு 14.0 சதவீதத்தால் குறைவடைந்தது. பங்குத்தரகர் துறையின் இவ்வருமானக் குறைவானது 2017இன் அதே காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.35.3 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ.57.9 மில்லியன் நட்டத்தை அறிக்கையிட வழிவகுத்துள்ளதுடன் இது 77.0 சதவீத தேறிய இலாபம் குறைவாகவுமுள்ளது. 2017இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மொத்தச் சொத்துக்கள் 18.4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. 2018 யூனில் பங்குத்தரகர்களின் மூலதனம் 2017 யூனின் ரூ.5,552.0 மில்லியனிலிருந்து ரூ.5,495.0 மில்லியனாக 1.0 சதவீதத்தால் சிறிதளவால் குறைவடைந்தது. குறிப்பிட்ட காலப்பகுதியில் பங்குத் தரகர்களின் மோசமான செயலாற்றமானது மூலதனச் சந்தையின் சரிவொன்றினைப் பதிவுசெய்யப்பட்டது. அதேவேளையில் 2018 யூன் 30இல் ஒரு கம்பனி பத்திரங்கள் மற்றும் பிணையங்கள் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய தவறியிருந்தது.

அட்டவணை 8.5

கூறு நம்பிக்கை துறை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2016 யூன் முடிவில் | 2017 யூன் முடிவில் | 2017 திசெ முடிவில் | 2018 யூன் முடிவில் (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 யூன் | 2018 யூன் (அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 127.7 | 104.3 | 128.8 | 64.8 | (18.3) | (37.9) |
| தேறிய சொத்துப் பெறுமதி - தே.சொ.பெ (ரூ.பில்லியன்) | 126.8 | 103.3 | 128.8 | 64.6 | (18.5) | (37.5) |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 122.8 | 102.3 | 127.7 | 64.8 | (16.7) | (36.7) |
| பங்குரிமை மூலதனம் | 12.6 | 14.4 | 13.0 | 11.1 | 13.9 | (22.8) |
| அரச பிணையங்கள் | 55.9 | 42.8 | 22.5 | 5.3 | (23.4) | (87.6) |
| ஏனையவை (உ.ம்: வர்த்தகப்பத்திரம், கடன்தொகுதிகள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் வங்கி வைப்புக்கள்) | 54.4 | 45.2 | 92.1 | 48.4 | (16.8) | 7.1 |
| தே.சொ.பெ இன் % ஆக பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகள் | 9.9 | 13.9 | 10.2 | 17.2 | | |
| தே.சொ.பெ இன் % ஆக அரச பிணையங்களில் முதலீடுகள் | 43.7 | 41.0 | 17.7 | 8.2 | | |
| தே.சொ.பெ இன் % ஆக ஏனைய முதலீடுகள் | 42.9 | 43.8 | 72.2 | 74.9 | | |
| கூறு வைத்திருப்போரின் மொத்த எண்ணிக்கை | 39,707 | 40,651 | 41,037 | 41,200 | | |
| வழங்கலிலுள்ள கூறுகளின் எண்ணிக்கை (பில்லியன்) | 8.9 | 6.7 | 7.6 | 2.0 | | |
| நம்பிக்கை கூறுகளின் எண்ணிக்கை | 76 | 76 | 79 | 79 | | |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை நம்பிக்கை கூறுகளின் சங்கம்

8

அட்டவணை 8.6

பங்குத் தரகுக் கம்பனிகள் துறை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2016 யூன் முடிவில் | 2017 யூன் முடிவில் | 2017 திசெ முடிவில் | 2018 யூன் முடிவில் (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 யூன் | 2018 யூன் |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 9.5 | 12.8 | 9.1 | 10.5 | 34.4 | (18.4) |
| மொத்தப் பொறுப்புக்கள் (ரூ.பில்லியன்) | 3.9 | 7.3 | 3.2 | 5.0 | 87.5 | (31.7) |
| தேறிய மூலதனம் (ரூ.பில்லியன்) | 4.5 | 5.6 | 5.8 | 5.5 | 22.6 | (1.0) |
| வருவாய் (ரூ.பில்லியன்) (ஆ) | 0.4 | 0.4 | 2.0 | 0.4 | 10.1 | (14.0) |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்) (ரூ.மில்லியன்) (ஆ) | (121.0) | 35.3 | 74.0 | (57.9) | (129.2) | (77.0) |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலம்:* இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு

## ஓய்வூதிய நிதியங்கள்

- **2018 யூன் இறுதியில் ரூ.2.2 றில்லியனுக்கு மேற்பட்ட ஒரு சொத்துத் தளத்துடன் இலங்கையின் மிகப் பெரிய ஓய்வுகால நிதியமாக ஊழியர் சேம நிதியம் விளங்குகிறது.** 2017 திசெம்பர் இறுதியில் ஊ.சே. நிதிய உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 18 மில்லியனை அடைந்து, முன்னைய ஆண்டினைவிட 4.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

- **2018இன் முதலரைப்பகுதியில் பெறப்பட்ட மொத்த உறுப்பினர் பங்களிப்புக்கள் ரூ.70.7 பில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மீளளிப்புக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.51.1 பில்லியனுக்கு 19.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** 2018இல் தேறிய பங்களிப்பு (மீளளிப்புக்களினைக் கழித்த பங்களிப்பு) 2017இல் ரூ.1.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.19.7 பில்லியனைத் தாண்டியது.

- **2018இன் 30இல் முடிவடையும் 12 மாதங்களில் ஊ.சே.நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.2,169 பில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் அதிகரித்ததன்படி ஊ.சே.நிதியத்தின் மொத்த முதலீடு ரூ.2,107 பில்லியனுக்கு 12.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** ஊ.சே.நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்கள் 91.8 சதவீதத்தினையும் பங்குரிமைச் சந்தை 3.8 சதவீதத்தினையும் மற்றும் கம்பனிப் படுகடன், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு 2.2 சதவீதத்தினையும் மற்றும் நிலையான வைப்புக்கள் 2.2 சதவீதத்தினையும் உள்ளடக்குகிறது. நிதியமானது 2018இல் முதலரைப்பகுதியில் மொத்த முதலீட்டு வருமானமாக ரூ.110.8 பில்லியனை அறிக்கையிட்டது. 2017இல் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 2.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையே குறித்து நிற்கின்றது.

- **2018 யூன் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை 2017 யூனின் 12.5 மில்லியனிலிருந்து 12.6 மில்லியனிற்கு அதிகரித்தது.** அவ்வாறாயினும், 2.6 மில்லியன் கணக்குகள் மட்டும் செயற்படு கணக்குகளாகக் காணப்பட்டன. 2018 யூன் இறுதியில் மொத்தப் பங்களிப்புப் பெறுகை 10.4 சதவீதத்தால் ரூ.12.3 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளையில், குறிப்பிட்ட காலப்பகுதியில் நன்மைக் கொடுப்பனவுகள் 0.2 சதவீதமான குறைவான வீதத்தில் ரூ.9.4 பில்லியனுக்கு அதிகரித்து ரூ.2.9 பில்லியன் தேறிய உயர் பங்களிப்பிற்கு விளைவாகியது. மேலும், 2018 யூன் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 12.4 சதவீதத்தால் ரூ.295.0 பில்லியனுக்கு அதிகரித்தது. 2018 யூன் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுப் பட்டியல் அரச பத்திரங்களில் குவிந்திருந்ததுடன் 72.3 சதவீதப் பங்கையும் வைத்திருந்தது. 2018 யூன் இறுதியில், பங்கு மூலதனம், கூறுநம்பிக்கை, கம்பனிப் படுகடன் பத்திரங்கள் மற்றும் ஏனைய முதலீடுகள் என்பன முறையே 3.8 சதவீதம், 0.1 சதவீதம், 0.9 சதவீதம் மற்றும் 22.8 சதவீதமாகக் காணப்பட்டன.

- **அரச பணிகள் ஓய்வூதிய நிதியங்கள் 228,700 செயற்படு அங்கத்தவர்களை அடக்கியுள்ளது.** 2018இன் முதலரையாண்டு காலப்பகுதியில் நிதியத்தின் தேறிய பங்களிப்பானது 2017இன் முதலரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.640.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.50.9 மில்லியனாகக் குறைவடைந்தது. இருந்தபோதிலும், நிதியத்தின் மொத்தச் சொத்துத் தளம் 28.8 சதவீதத்தால் ரூ.64.2 பில்லியனாகியது. மேலும், அரச பணிகள் ஓய்வூதிய நிதியங்களின் முதலீடு 2017 யூன் இறுதியில் ரூ.47.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 யூன் இறுதியில் ரூ.62.7 பில்லியனாக மேம்பட்டது. 2018 யூன் இறுதியில் அரச பிணையங்களின் மீதான முதலீட்டுப் பங்கு 2017 யூன் இறுதியின் 96.3 சதவீதத்திலிருந்து 66.8

8

அட்டவணை 8.7
ஓய்வூதிய நிதியங்கள் - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | ஊழியர் சேமலாப நிதி | | | ஊழியர் நம்பிக்கை நிதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 யூன் முடிவில் | 2018 யூன் முடிவில் (அ) | மாற்றம் (%) | 2017 யூன் முடிவில் | 2018 யூன் முடிவில் (அ) | மாற்றம் (%) |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்லியன்) (ஆ) | 65.0 | 70.7 | 8.8 | 11.1 | 12.3 | 10.4 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்லியன்) (ஆ) | 63.6 | 51.1 | (19.7) | 9.4 | 9.4 | 0.2 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 1,948 | 2,169 | 11.3 | 262.4 | 295.0 | 12.4 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்) | 1,873 | 2,107 | 12.5 | 246.8 | 287.9 | 16.6 |
| இதில், அரச பிணையங்கள் (%) | 91.6 | 91.8 | 0.2 | 84.4 | 72.3 | (14.2) |
| திரண்ட வருவாய் (ரூ.பில்லியன்) (ஆ) | 108.4 | 110.8 | 2.2 | 13.6 | 14.5 | 6.1 |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

சதவீதக் குறைவை பதிவுசெய்தது. காலப்பகுதிக்கான அங்கத்தவர்களின் நிலுவை மீதான வருமான வீதம் 13.0 சதவீதமாகவிருந்தது.

- **2018 யூன் இறுதியில், 127 தனிப்பட்ட முகாமைப்படுத்தப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வுகால நிதியங்கள் 169,201 அங்கத்தவர்களுடன் காணப்பட்டன.** 2018 யூன் இறுதியில் இத்தனிப்பட்ட ஓய்வுகால நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் ரூ.179.7 பில்லியானாகவிருந்த வேளையில் முதலீடு ரூ.163.8 பில்லியனாகக் காணப்பட்டது.


## நிதியியல் சந்தைகளில் அபிவிருத்திகள்

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை

- **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது 2018 செத்தெம்பர் இறுதி வரையான பெரும்பாலான காலப்பகுதியில் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் மற்றும் துணைநில் வைப்பு வசதி வீதம் என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட துணைநில் வீத வீச்சின் ஏறத்தாழ நடு வீதத்தில் தளம்பலுடன் காணப்பட்டது.** 2017 இறுதியில் 8.15 சதவீதத்தில் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2018 மாச்சு இறுதிவரை உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவிய மிகையான திரவத்தன்மையின் காரணமாக தொடர்ந்தும் அம்மட்டத்திற்கு நெருக்கமாகக் காணப்பட்டது. புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் 2018 ஏப்பிறல் 02 இலிருந்து அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பெயரளவு வரி வரவின் அகற்றல் பிரயோகம் மீதான நிச்சயமற்ற தன்மையின் காரணமாக அழைப்பு மற்றும் மீள்கொள்வனவு வீதங்களில் முரண்பாடு காணப்பட்டது. இதன் விளைவாக, மாச்சு இறுதியில் 8.14 சதவீதமாக விளங்கிய சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் அடுத்த நாள் 26 அடிப்படைப் புள்ளிகளினால் மிகக் கூடுதலாக அதிகரித்து அடுத்த சில நாட்களுக்கு வீச்சின் மேல் மட்டத்திற்கு நெருக்கமாகக் காணப்பட்டதுடன் பின்னர் வீச்சின் நடுப்பகுதியை நோக்கி குறைவடைந்தது. 2018 ஏப்பிறல் 4ஆம் நாளன்று துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் 25 அடிப்படைப் புள்ளிகளினால் 8.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதன் மூலம் நாணயக் கொள்கை நிலை தளர்த்தப்பட்டதுடன் அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றிய திரவத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் வீழ்ச்சியடைவதற்கு உதவியது. மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் உரிய காலத்திற்கு முன்னரான இளைப்பாறலிலிருந்து தோன்றிய திரவத்தன்மைப் பற்றாக்குறைக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2018 யூன் முதல் வாரத்தில் வீச்சின் மேல் எல்லையை நோக்கி மீண்டும் நகர்ந்தது. எனினும், மத்திய வங்கியுடனான அரசாங்கத்தின் கொடுக்கல்வாங்கல்களின் காரணமாக யூலை இறுதியிலிருந்து 2018 செத்தெம்பர் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவிய மிகையான திரவத்தன்மையின் காரணமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து துணைநில் வீத வீச்சின் நடுப்பகுதியைச் சுற்றிக் காணப்பட்டது. அதன் பின்னர், 2018 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து சந்தைத் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்தமையுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையை நோக்கி நகர்ந்தமைக்கு அரசுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களும் வர்த்தக வங்கிகளுடனான வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்களுமே முக்கிய காரணமாகும். 2018 ஒத்தோபர் 3 அளவில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 8.44 சதவீதமாகக் காணப்பட்டது.

வரைபடம் 8.16

துணைநில் வீத வீச்சு, நிறையேற்றப்பட்ட அழைப்புப்பண வீதம் மற்றும் சந்தைத் திரவத்தன்மை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **2018 மே இறுதி வரை மிகையாகக் காணப்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை 2018 யூலை நடுப்பகுதியில் அது மிகைக்கு மாறுவதற்கு முன்னதாக பற்றாக்குறைக்கு மாற்றமடைந்தது.** எனினும், உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை வீழ்ச்சியடைந்து 2018 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து பற்றாக்குறையாகக் காணப்பட்டது. பணச் சந்தையின் மிகை 2017 இறுதியில் ரூ.18.3 பில்லியனிலிருந்து சனவரி தொடக்கத்தில் 45.6 பில்லியனுக்கு மிக உயர்வாக அதிகரித்தமைக்கு மத்திய வங்கியின் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்கள் வழங்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல் கொள்வனவின் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மையானது தொடர்ந்தும் காணப்பட்டது. எனினும், 2018 ஏப்பிறல் நடுப்பகுதி வரையான ஆறு வார காலப்பகுதியில் நாணய எடுப்பனவுகளின் காரணமாக திரவத்தன்மை ரூ.116 பில்லியனுக்கும் கூடுதலான அளவில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மத்திய வங்கி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை விரும்பத்தக்க மட்டமொன்றில் பேணுவதற்காக உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. வெளிநாட்டுச் செலாவணி ஒன்றிற்கொன்றான பரிமாற்றல் முதிர்ச்சியடைந்தமை மற்றும் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்கள் உரிய காலத்திற்கு முன்னரே இளைப்பாறியமை என்பனவற்றுடன் 2018இன் இறுதியில் திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மாறியது. சந்தையின் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவுகளையும் அதேபோன்று ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்ஏலங்களையும் நடத்தியது. அதேவேளை, மத்திய வங்கியுடன் அரசாங்கம் மேற்கொண்ட வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான கொடுக்கல்வாங்கல்களும் 2018 யூலை நடுப்பகுதியலிருந்து திரவத்தன்மையினைப் படிப்படியாக அதிகரித்தது. எனினும், அரசாங்கத்தின் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்கள் மாற்றமடைந்தமை வெளிநாட்டுச் செலாவணி ஒன்றிற்கொன்றான பரிமாற்றல் முதிர்ச்சி என்பனவற்றின் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை 2018 செத்தெம்பர் நடுப்பகுதியில் பற்றாக்குறை மட்டத்திற்கு மீண்டும் திரும்பியது. எனவே, உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உட்புகுத்துவதற்காகத் தற்காலிக அடிப்படையில் ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்திய வேளையில் நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையினை உட்புகுத்துவதற்காக திறைசேரி உண்டியல்களின் நேரடிக் கொள்வனவுகளை நடத்தியது. இதன்படி, உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை 2018 ஒத்தோபர் 03ஆம் நாளன்று ரூ.35.6 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.

## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை


- **2018இன் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கை ரூபாய் 2017 திசெம்பரில் ரூ.**152.85 இலிருந்து 2018 செத்தெம்பரில் ரூ.169.24 ஆக ஐ.அ.டொலருக்கெதிராக 9.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் செலாவணி வீதம் ஒப்பீட்டு ரீதியில் நிலையாகக் காணப்பட்டதுடன் மத்திய வங்கி சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை உள்ளீர்க்கக் கூடியதாயிருந்தது. 2018 ஏப்பிறல் இறுதியிலிருந்து இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதி பெறுகைகளின் குறைந்த அளவிலான மட்டங்கள் மற்றும் ஐ.அ.டொலருக்கெதிரான ரூபாயின் பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு தேய்மானத்துக்கு ஏதுவாயிருந்த வாகனங்களுக்கான மற்றும் கட்டட நிருமாணத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் எண்ணெய் இறக்குமதி செலவினங்கள் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. இந்த அழுத்தமானது மே தொடக்கம் செத்தெம்பர் வரை மேலும் அமெரிக்க பெடரல் றிசேர்வின் வட்டி வீத அதிகரிப்பு மூலம் உந்தப்பட்ட உள்நாட்டு அரச பிணையங்களில் மற்றும் பங்குரிமை மூலதனங்களில் வெளிநாட்டு முதலீடுகளின்

வெளியேற்றம் காரணமாக அமைந்திருந்தன. 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கை ரூபாயானது உலகின் மற்றைய பிரதான நாணயங்களான யப்பானிய யென், ஸ்ரேலிங் பவுண், யூரோ ஆகியவற்றுக்கெதிராக தேய்வடைந்தது. மேலும், 2017இல் இந்திய ரூபாய்க்கெதிராக தேய்வடைந்த இலங்கை ரூபா 2018இல் பெறுமதி உயர்வினைக் காட்டியமைக்குக் காரணம் ஐக்கிய அமெரிக்க டொலர்/ இலங்கை ரூபாவுடன் ஒப்பிடும் போது ஐக்கிய அமெரிக்க டொலர்/ இந்திய ரூபாவின் அதிகளவில் தேய்வடைந்தமையேயாகும்.

- **2018இன் முதல் ஒன்பது மாதங்களில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியானது தேறிய விற்பனையாளராகக் காணப்பட்டது.** ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சாதகமான சந்தை நிலைமைகளில் தொடர்ச்சியாக வெளிநாட்டுச் செலாவணியை சந்தையிலிருந்து கொள்வனவு செய்ததன் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகளவில் திரட்ட முடிந்தது. ஆயினும் அடுத்துவந்த ஐந்து மாதங்களில் செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்காக, மத்திய வங்கி சந்தையில் தலையிட்டு வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்ய வேண்டியதாயிருந்தது. அதற்கமைய, செத்தெம்பர் இறுதி வரையிலான காலப்பகுதியில் மத்திய வங்கியானது ஐ.அ.டொலர் 547.0 மில்லியனை உள்ளீர்த்து உள்வாங்கி, ஐ.அ.டொலர் 732.0 மில்லியனை வழங்கி ஐ.அ.டொலர் 185.0 மில்லியன் கொண்ட தேறிய வழங்கலை ஏற்படுத்தியது.

- **2018 செத்தெம்பர் இறுதியில் முடிவடைந்த காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் வர்த்தக அளவுகள் 2017ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீத சிறிதளவால் அதிகரிப்பைக் காட்டியது.** இக்காலப்பகுதியில வங்கிகளுக்கிடையான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் மொத்த அளவு 2017ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 13.1 பில்லியனாகவிருந்தது. தொடர்பான காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான இவ்வாண்டில் வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் நாளாந்த சராசரி அளவு ஐ.அ.டொலர் 73.0 மில்லியனால் அதிகரித்த வேளையில் 2017இன் இதே காலப்பகுதியில் இது ஐ.அ.டொலர் 70.0 மில்லியனாக இருந்தது. செத்தெம்பர் இறுதி வரையிலான மொத்த முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவானது ஐ.அ.டொலர் 5.0 பில்லியனாகக் குறைவடைந்ததுடன் 2017இன் இதே காலப்பகுதியில் மீளாய்வுக் காலப்பகுதியில் இது ஐ.அ.டொலர் 6.6 பில்லியனாக இருந்தது.

வரைபடம் 8.17
ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கு எதிராக ரூபாயின் அசைவு



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


### அரசாங்க பிணையங்கள் சந்தை

- **2018இன் முதலரைப்பகுதியில் நிதியிடலின் உயர்ந்தளவு பங்கு வெளிநாட்டுச் சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வேளையில் உள்நாட்டுச் சந்தையில் ஒழுங்குமுறையான வழங்கல் அளவொன்று பேணப்பட்டு வந்தது.** 2017இன் பின்னரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுச் சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் திரவத்தன்மைப் பற்றாக்குறை என்பனவற்றினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018இன் முதலரைப்பகுதியில் படுகடன் வழங்கலுக்காகப் பின்பற்றப்பட்ட உபாயங்கள் ஐ.அ.டொலர் 2,500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலையும் ஐ.அ.டொலர் 712.19 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலையும் முக்கியமாக நடுத்தர கால முதிர்ச்சிகளைக் கொண்ட ரூ.337.02 பில்லியன் திறைசேரி முறிகள் வழங்கலையும் உள்ளடக்கியிருந்தன. இது கிடைக்கத்தக்க உள்நாட்டில் முதலிடத்தக்க நிதியங்கள் இல்லாமல் போவதற்கான ஏதேனும் சாத்தியங்களை எதிரீடு செய்வதற்கான நோக்கத்தினையும் பன்னாட்டு மூலதனச் சந்தை வட்டி வீதங்களின் சாத்தியமான மேல் நோக்கிய சீராக்கங்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் நடுத்தரகால திறைசேரி முறிகளின் வழங்கலானது, உண்ணாட்டரச பிணையங்களின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தைக் குறைப்பதற்கு மிதமானளவில் பங்களித்த போதும், அரச பிணையங்கள் முழுவதிலும் ஒழுங்கான வட்டி வீதமொன்றினைப் பேணுவதற்கு படுகடன் முகாமையாளர்களை இயலச்செய்தது.

8

- **அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியின் இறுதியில் சமாந்தரமாக கீழ் நோக்கிப் பெயர்ந்தமையைக் காட்டியது.** 2018இன் முதலரைப்பகுதியின் இறுதியில் 91-நாள், 182-நாள் மற்றும் 364-நாள் திறைசேரி முறிகள் தொடர்பான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் 2017இன் முதலரைப்பகுதியின் இறுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 118 அடிப்படைப் புள்ளிகளினாலும் 140 அடிப்படைப் புள்ளிகளினாலும் 107 அடிப்படைப் புள்ளிகளினாலும் குறைவடைந்தன. இதே காலப்பகுதியில் 2 இலிருந்து 10 ஆண்டுகள் வரையான முதிர்ச்சியைக் கொண்ட தீவிரமாக வர்த்தகப்படுத்தப்பட்ட திறைசேரி முறிகளின் சந்தை விளைவு வீதங்கள் 64 - 90 அடிப்படைப் புள்ளிகள் கொண்ட வீச்சில் காணப்பட்டன. மேம்பட்ட சந்தை நிலைமைகள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுடன் சேர்ந்து, அரச பிணையங்களின் வழங்கல் செயன்முறையின் அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் ஊகத்தன்மையுடன் இணைந்தமை மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுடன் இசைந்த அரச பிணையங்கள் வழங்கலுடன் சேர்ந்து உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட வட்டி வீதங்கள் மீதான அழுத்தத்தினை விடுவிப்பதற்காக சாதகமான விதத்தில் பங்களித்தது. வதிவற்றோரின் வசமிருந்து திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் 2017 இறுதியின் ரூ.322.6 பில்லியனிலிருந்து 2018 யூலை இறுதியளவில் ரூ.287.6 பில்லியனுக்குக் குறைவடைந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அவர்களது முதலீடுகளை முன்னணி மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து மீள்நிலைப்படுத்திக் கொண்டமையினை ஓரளவிற்குப் பிரதிபலித்தது.

வரைபடம் 8.18
அரச பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வளையி




*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

### கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை


- **2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வர்த்தகப் பத்திரத்திற்கான சந்தை ஒப்பீட்டளவில் தீவிரம் குறைந்ததாகக் காணப்பட்டது.** 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், வழங்கப்பட்ட வர்த்தகப் பத்திரங்களின் பெறுமதி 2017இன் அதே காலப்பகுதியின் ரூ.5.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1.7 பில்லியனாகவிருந்தது. வர்த்தகப் பத்திரங்கள் மீதான வட்டி வீதங்கள் 2017இன் அதே காலப்பகுதியில் 14.25 - 16.50 சதவீத வீச்சில் காணப்பட்ட அதேவேளையில் 2018இல் 13.10 - 15.00 சதவீத வீச்சில் காணப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியில் 3 மாதங்கள் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்களே வழங்கப்பட்டுள்ளன. 2018 செத்தெம்பர் இறுதியில் வர்த்தகப் பத்திரத்தின் மொத்த வெளிநின்ற தொகை 2017 செத்தெம்பரின் ரூ.2.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1.2 பில்லியனாக இருந்தது.

- **2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கம்பனிப் படுகடன் சந்தை முதலாண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டது.** இதற்கு வங்கிகளிற்கான பாசல் III புதிய பட்டியலிடல் தேவைப்பாடு முக்கிய காரணமாகவிருந்தது. 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 2017இன் அதே காலப்பகுதியில் 2 நிறுவனங்களால் வழங்கப்பட்ட 7 கம்பனித் தொகுதி கடன் பத்திரங்களுடன் ஒப்பிடுகையில் 10 நிறுவனங்களால் 20 கம்பனித் தொகுதி கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இக்காலப்பகுதியில் பட்டியலிடப்பட்ட 10 நிறுவனங்களில் 8 வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையை சார்ந்தவையாக இருந்தன. 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பட்டியலிடப்பட்ட கம்பனி முறிகளின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ.10.0 பில்லியனிலிருந்து ரூ.52.3 பில்லியனுக்கு அதிகரித்தது. இக்காலப்பகுதியில் வழங்கப்பட்ட கம்பனி முறிகளின் வட்டி வீதங்கள் 2017இன் 11.95 - 15.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2018இல் 12.00 - 14.75 சதவீத வீச்சில் காணப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு பூச்சிய கூப்பன் கடன் பத்திரம் வழங்கப்பட்டது.

### பங்குரிமைச் சந்தை

- **கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது 2017ஆம் ஆண்டின் எய்தப்பட்ட வளர்ச்சிக்கு மாறாக 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் விரும்பத்தகாத செயலாற்றுகையை பதிவுசெய்தது.** பங்குச்

வரைபடம் 8.19
பங்கு விலைச் சுட்டெண்களின் நகர்வுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சுட்டெண் 8.0 சதவீதத்தினாலும் ஸ்ரான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 18.2 சதவீதத்தினாலும் 2018 செத்தெம்பர் மாதம் வரை வீழ்ச்சியடைந்தது. சந்தை மூலதன மயப்படுத்தலானது, 2017 இறுதியில் ரூ.2,899.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 செத்தெம்பர் முடிவில் ரூ.2,752.9 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. நாளாந்தச் சராசரிப் புரள்வானது 2017இல் ரூ.915.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ரூ.787.6 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் 2018இன் நாளாந்தச் சராசரிப் புரள்வானது,ரூ.737.2 மில்லியனாக பதிவுசெய்த வேளையில் 2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில்சிறிதளவால் உயர்வானதாகவே காணப்படுகிறது. 2017ஆம் ஆண்டின் குறித்த காலப்பகுதியில் 727,064 ஆகப் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகத்தின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 675,796 ஆக வீழ்ச்சியடைந்தது. 2018இன் செத்தெம்பர் இறுதியில் சந்தை விலை வருவாய் விகிதம் 2017 இறுதியில் காணப்பட்ட 10.6 மடங்குடன் ஒப்பிடுகையில் 9.2 மடங்கிற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

சந்தையானது, எதிர்காலக் கொள்கை நெறியாள்கை மீதான அதிகரித்த நிச்சயமற்ற முதலீட்டாளர்களுடன் கூடிய உறுதியற்ற வெளிநாட்டு பங்குபற்றலாலும் நாணய மாற்று வீதங்கள் மீதான அழுத்தம் மற்றும் அண்மைய உலக அபிவிருத்திகளினாலும் உறுதியற்றதாகக் காணப்பட்டது. அண்மைய காலப்பகுதியில் நாணய மாற்று விகிதங்கள் மீதான அதிகரித்த அழுத்தங்கள் மற்றும் உலக அபிவிருத்திகள் காரணமாக முதலீட்டாளர்களின் மன உணர்வுகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகிய பிரதான காரணிகளால் தொடர்ச்சியான தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டன.

- **தேறிய வெளிநாட்டு விற்பனைகள் அதிகரித்த வேளையில் விலைச்சுட்டெண்கள், சந்தை மூலதனமாக்கல் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் சராசரிப் புரள்வு என்பன வீழ்ச்சியடைந்தது.** அனைத்துப் பங்கு விலைச்

- **2017ஆம் ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதியில் ரூ.17.2 பில்லியனாகப் பதிவுசெய்த உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் மொத்தத் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலானது 2018 செத்தெம்பர் இறுதி வரையில் ரூ.6.2 பில்லியனாகக் காணப்பட்டது.** குறித்த காலப்பகுதியில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் 3 முதன்மைப் பொது வழங்கல்கள் ரூ.15.2 பில்லியனால் உயர்வாகக் காட்டியதுடன் ரூ.37.0 பில்லியனானது 15 உரித்து வழங்கல்கள் மூலமும் உயர்த்தப்பட்டது.

அட்டவணை 8.8
பங்கு மூலதனச் சந்தை - தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்


| விடயம் | 2016 செத் முடிவில் | 2017 செத் முடிவில் | 2017 முடிவில் | 2018 செத் முடிவில் |
|---|---|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985 = 100) | 6,534.8 | 6,438.2 | 6,369.3 | 5,862.2 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | (5.2) | 3.4 | 2.3 | (8.0) |
| எஸ் அன்ட் பீ இலங்கை 20 சுட்டெண் (2004 = 1,000) | 3,617.3 | 3,688.0 | 3,671.7 | 3,002.0 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | (0.2) | 5.5 | 5.0 | (18.2) |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்) | 2,785.7 | 2,919.7 | 2,899.3 | 2,752.9 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக (%) (அ) | 23.5 | 24.7 | 24.5 | 20.7 |
| சந்தை விலை உழைப்பு விகிதம் | 13.4 | 10.7 | 10.6 | 9.2 |
| சராசரி நாளாந்தப் புரள்வு (ரூ. மில்லியன்) | 753.2 | 914.8 | 915.3 | 787.6 |
| இரண்டாந்தரச்சந்தையின் தேறிய திரண்ட வெளிநாட்டுக் கொள்வனவுகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | (3.2) | 17.2 | 17.7 | (6.2) |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 295 | 295 | 296 | 297 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 6 | 14 | 15 | 15 |
| உரிமை வழங்கல்களின் மூலம் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்லியன்) | 2.5 | 42.3 | 51.6 | 37.0 |
| ஆரம்பப் பங்கு வழங்கல் | 3 | 2 | 2 | 3 |
| ஆரம்பப் பங்கு வழங்கல்கள் மூலம் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்லியன்) | 1.9 | 8.5 | 1.0 | 15.2 |

(அ) 2016இற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது (ரூ. 13,317 பில்லியன்)

*மூலம்:* கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

8

வரைபடம் 8.20
கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு பங்குபற்றல்




*மூலம்*: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

2017ஆம் ஆண்டில் குறித்த காலப்பகுதியில் பதிவுசெய்த 46.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் புரள்வின் 45.3 சதவீதத்திற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பொறுப்பாகவிருந்தனர்.

## அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினைப் பெறும் வழிவகைகள்

- **இலங்கை அரசாங்கத்தின் முகவரான மத்திய வங்கியானது 2018இன் முதலரையாண்டுக் காலப்பகுதியில், தற்போது காணப்படுகின்ற சலுகைக் கடன் திட்டங்களின் புதிய அபிவிருத்தி நிதிக் கொள்கை உபாயங்களை தொடர்ந்தும் உருவாக்கி நடைமுறைப்படுத்தியது.** இப்புதிய முயற்சிகளும் கொடுகடன் தொழிற்பாடுகளின் விரிவுபடுத்தலும் நாட்டின் நிதியியல் பணிகளும் சமநிலையான பொருளாதார வளர்ச்சியினையும் நிதியியல் பணிகளின் தன்மையினையும் அதிகரிப்பதற்குப் பங்களித்தன.

- **2018இன் முதலரையாண்டுக் காலப்பகுதியில், மத்திய வங்கியானது பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை அத்துடன்/ அல்லது கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் போன்றவற்றினைத் தொடர்ந்தும் ஒருங்கிணைத்து, வசதிப்படுத்தி நடைமுறைப்படுத்திய அதேவேளை பல வகையான கொடுகடன் குறைநிரப்புச் சேவைகளை வழங்கியது.** தனிப்பட்டவர்கள் மற்றும் நாடு முழுவதும் சிதறிக் காணப்படும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு இத்திட்டங்களினூடாக இயலுமான நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் சேவையளிக்கப்பட்டன. வேளாண்மை மற்றும் விலங்குவளர்ப்பு, கைத்தொழில் மற்றும் பணித் துறைகள் உள்ளடங்கலாக பரந்தளவிலான துறைகளை இந்நன்மைபெறுநர்கள் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர். நிதியியல் உட்சேர்த்தல் மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு முறையான நிதியியல் துறைக்கு அணுகுவழியினைக் கொண்டிராதவர்கள் மீது விசேட கவனம் செலுத்தி நிதியியல் அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடரொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

- **2018இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் 08 மீள்நிதியளித்தல் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் 73,656 நன்மைபெறுநர்கள் மத்தியில் ரூ.11,719.4 மில்லியன் தொகைக்கான கடன்கள் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களினூடாக மத்திய வங்கி பகிர்ந்தளித்தது.** இப்பகிர்ந்தளிப்புக்களில், பெரும்பாலான கடன்கள் (51.0 சதவீதம்) வட்டி உதவுதொகைத் திட்டங்களினூடாக வழங்கப்பட்ட அதேவேளை 49.0 சதவீதமான கடன்கள், மீள்நிதியளித்தல் கடன் திட்டங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கை அரசாங்கம், மத்திய வங்கி, கொடை வழங்கும் முகவராண்மைகள் மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்கள் என்பன இக்கடன் திட்டங்களின் நிதியளித்தல் மூலங்களாகவிருந்தன. கொள்கை நோக்கில், மத்திய வங்கியானது “அத்வெல” கடன் திட்டம் தொடர்பில் அவசியமான கொள்கைத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்படும் சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்தது.

- **இலங்கை அரசாங்கமானது 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் 68,754 நன்மைபெறுநர்களுக்கு சேவையளித்து ரூ.8,459.7 மில்லியன் அல்லது மொத்தக் கடன் பகிர்ந்தளிப்பின் 72.2 சதவீதம் பங்களிப்புச் செய்ததன் மூலம் 06 மீள்நிதியளித்தல் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்களுக்கு தொடர்ந்தும் நிதியளித்தது.** இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட இத்திட்டங்களின் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் இக்காலப்பகுதியின் போது 11.4 சதவீதத்தினால் அதிகரித்தன. இத்திட்டங்களுக்கு மத்தியில், வட்டி உதவுதொகைத் திட்டமொன்றாகவும் கொடுகடன் உத்தரவாதத்திட்டமாகவும் பணியளிக்கின்ற புதிய அனைத்தினையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமான “சருசார” 33 குறுங்கால பயிர் வர்க்கங்களின் 50,146 சிறியளவிலான வேளாண்மையாளர்களுக்காக வட்டி உதவுதொகையினை வழங்குவதன் மூலம்

8

அட்டவணை 8.9
நிதியிடல் மூலங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| நிதியிடல் மூலம் | பங்கு (%) | | | |
|---|---|---|---|---|
| | 2017 சன-செத் | | 2018 சன-செத் | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| அரசின் நிதியிடல் | 82.3 | 61.8 | 92.7 | 71.5 |
| மத்திய வங்கியின் நிதியிடல் | 8.4 | 33.1 | 6.6 | 27.6 |
| கொடையாளர்களின் நிதியிடல் (அ) (ஆ) | 9.4 | 5.1 | 0.7 | 0.9 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) 2017இற்கான தரவுகளானது 2018 திசெம்பர் 31இல் முடிவுறுத்தப்பட்ட 05 தேசிய விவசாய வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயலாற்றங்களை உள்ளடக்கியுள்ளது.
(ஆ) 2018இற்கான தரவுகளானது 2018 செத்தெம்பர் வரையான சிறு உடமையாளர் விவசாய வியாபார பங்குடமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியத்தின் வருமான உருவாக்கத்தின் கடன் திட்டத்தின் செயலாற்றங்களை உள்ளடக்கியுள்ளது.

குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினைக் காண்பித்தது. புதிய அனைத்தினையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்ட பகிர்ந்தளிப்புக்கள் மாத்திரம் 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் மொத்தப் பகிர்ந்தளிப்புகளில் 48.7 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் 67.5 சதவீதமாகவிருந்தது. புதிய அனைத்தினையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு அடுத்து 3,543 நன்மைபெறுநர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.1,499.7 மில்லியன் பெறுமதியுடைய மீள்நிதியழித்தலை வழங்குவதன் மூலமான இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட "அத்வெல" கடன் திட்ட செயலாற்றம் காணப்பட்டது. இது, தொடர்புடைய காலப்பகுதியில் மொத்த பகிர்ந்தளிப்புக்களின் 12.8 சதவீதத்தினையும் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் 17.7 சதவீதத்திற்கும் வகைகூறியது. இலங்கை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டவாறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தொழில்முயற்சியாளர்களின் அனர்த்தத்திற்குப் பிந்திய மீட்பு முயற்சிகளுக்கு துணையளிப்பதற்காக 2017 ஓகத்தில் "அத்வெல" கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், 94,893 நன்மைபெறுநர்கள் மத்தியில் ரூ.7.0 பில்லியன் தொகைக்கான கடன்களை வழங்கி நாட்டின் வறுமை ஒழிப்பிற்கு பங்களிக்கின்ற வறுமை ஒழிப்பு மற்றும் நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு 2018 யூலை 15 அன்று வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது.

- **நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை அத்துடன் பாற்பண்ணைக் கைத்தொழில் என்பனவற்றின் நிதியியல் சென்றடைவினை விரிவுபடுத்தும் நோக்குடன் முறையே மீள்நிதியளித்தல் திட்டமான "சௌபாக்கிய - சுபீட்சம்" கடன் திட்டம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டமொன்றான வர்த்தக ரீதியான அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன் திட்டம் ஆகிய இரண்டு பிரதான திட்டங்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் நிதியளித்தது.** மத்திய வங்கியின் மீள்நிதியளித்தல் திட்டங்களில் மத்திய வங்கி நிதியளித்த திட்டங்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் 91.9 சதவீதத்திற்கு வகைகூறி ரூ.2,996.9 மில்லியன் வழங்கி 2018இன் முதல் மூன்று காலாண்டில் முதன்மை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கடன் திட்டமாக சௌபாக்கிய - சுபீட்சம் கடன் திட்டம் தொடர்ந்தும் தொழிற்பட்டது. இத்தொகை மொத்தப் பகிர்ந்தளிப்புகளில் 25.6 சதவீதத்திற்கு வகைகூறியது. மத்திய வங்கியினால் நிதியளிக்கப்பட்ட வட்டி உதவுதொகைத் திட்டமான வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டமானது பாலில் தன்னிறைவினை அடைந்துகொள்ளும் தேசிய குறிக்கோளுக்கு ஆதரவளித்து பாற்பண்ணையுடன் தொடர்புபட்ட அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கி பாற்பண்ணை தொழில்முயற்சியாளர்களுக்கான நிதியியல் வசதிகளை வழங்கும் குறிக்கோளுடன் தொடர்ந்தும் இயங்கியது.

- ஒட்டுமொத்தமாக மத்திய வங்கியினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் 2018இன் முதல் ஒன்பது மாதங்களின் போது 20.0 சதவீதங்களினால் சிறிதளவினால் குறைவடைந்தது.

அட்டவணை 8.10
அரசினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| கடன் திட்டம் | கடன் பகிர்ந்தளிப்புக்கள் | | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 சன-செத் | | 2018 சன-செத் | | 2018 சன-செத் | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | 7,495.0 | 372.0 | 9,668.0 | 482.1 | 29.0 | 29.6 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | 10,922.0 | 922.5 | 3,573.0 | 336.2 | (67.3) | (63.6) |
| சுவசக்தி | 3.0 | 0.4 | 1,608.0 | 332.9 | 99.8 | 99.8 |
| அத்வெல (அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான கடன் திட்டம்) | - | - | 3,543.0 | 1,499.7 | - | - |
| சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன்திட்டம் - கட்டம் II | - | - | 216.0 | 99.8 | - | - |
| புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் | 45,911.0 | 4,959.5 | 50,146.0 | 5,709.0 | 9.2 | 15.1 |
| தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படும் மூலதனக் கடன் திட்டம்* | 5,871.0 | 1,341.4 | - | - | - | - |
| **மொத்தம்** | **70,202.0** | **7,595.8** | **68,754.0** | **8,459.7** | **(2.1)** | **11.3** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*2017 ஓகத்து 14இல் கடன் பகிர்ந்தளிப்புக்கள் முடிவுறுத்தப்பட்டன. வட்டி மானியங்களுக்கான கொடுப்பனவுகள் 2019 ஓகத்து வரை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

8

ரூ.6.0 பில்லியன் பெறுமதியான கடன் வழங்கும் இலக்கினை அடைந்ததன் பின்னர் 2018 யூனில் வர்த்தகளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் நிறைவுபெற்றமை இக்குறைவின் 93.7 சதவீதத்திற்குப் பங்களித்தது.

- தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கிய பிரதான வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் நிதியளித்த வேளாண் வியாபார அபிவிருத்திக் கடன் திட்டங்கள் அதாவது தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நுண்பாகநிதி, தருணதிரிய, வெளிப்பயிர்ச்செய்கையாளர் வேளாண்மையாளர் (மூலதன மற்றும் பருவகாலக் கடன் திட்டங்கள் மற்றும் அனர்த்தத்திற்குப் பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டங்கள்) ஆகியன முடிவுறுத்தப்பட்டதுடன் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியமும் இலங்கை அரசாங்கமும் சிறு உடமையாளர் பங்குடமை வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு 2018இன் ஆரம்பகாலப்பகுதியில் நிதியளித்தல் உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டன. சிறு உடமையாளர் பங்குடமை வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் வழங்கப்பட்ட புதிய நிதியளித்தல் மற்றும் முன்னைய வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் தற்போது காணப்படுகின்ற மற்றும் எதிர்கால அறவீடுகள் என்பனவற்றை கூட்டிணைக்கின்ற திரட்டிய தொடர் கொடுகடன் ஒன்றினை உருவாக்குவதன் மூலம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கம் என்பனவற்றின் மூலம் இணைந்து நிதியளிக்கப்பட்டதாகும்.

அட்டவணை 8.11

மத்திய வங்கி கடன் திட்டங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| கடன் திட்டம் | கடன் பகிர்ந்தளிப்புக்கள் | | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 சன-செத் | | 2018 சன-செத் | | 2018 சன-செத் | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| சௌபாக்கியா | 5,977.0 | 3,048.3 | 4,627.0 | 2,996.9 | (22.6) | (1.7) |
| வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம்* | 1,160.0 | 1,024.8 | 275.0 | 262.7 | (76.3) | (74.4) |
| **மொத்தம்** | **7,137.0** | **4,073.1** | **4,902.0** | **3,259.6** | **(31.3)** | **(20.0)** |

*ரூ.6 பில்லியன் பெறுமதியான கடன்களை வழங்குகின்ற இலக்கினை அடைந்ததன் பின்னர் 2018 யூனில் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **சிறு உடமையாளர் பங்குடமை வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள் இலங்கை சிறு உடமை சமூகத்தின் வறுமையினைக் குறைப்பதற்கும் போட்டித்தன்மையினை அதிகரிப்பதற்கும் பங்களிப்பதாகும்.** இது வர்த்தக ரீதியான நோக்கினைக் கொண்ட வேளாண்மை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் ஈடுபடுகின்ற 57,000 சிறு உடமை வேளாண்மையாளர் வீட்டலகுகளின் வருமானம் மற்றும் ஊட்டச்சத்தின் தரம் என்பனவற்றை அதிகரிப்பதற்கும் முனைகின்றது. சிறு உடமையாளர் பங்குடமை வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், 06 கடன் திட்டங்களை உள்ளடக்குவதுடன் இக்கடன் திட்டங்களின் தொழிற்பாடுகள் தற்போது ஆரம்ப மட்டத்தில் காணப்படுகின்றன. 2018இன் செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு சிறு உடமையாளர் பங்குடமை வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டக் கடனின் கீழ் ரூ.224.7 மில்லியன் கொண்ட 1,073 கடன்கள் பதிவுசெய்யப்பட்டன. 2018 மே இறுதியிலிருந்து செத்தெம்பர் வரை ரூ.106.4 மில்லியன் தொகையுடைய 527 கடன்கள் மீள்நிதியளிக்கப்பட்டிருந்தன.

- **மத்திய வங்கியானது சமநிலையான மற்றும் உட்சேர்க்கின்ற பொருளாதார வளர்ச்சியினை எய்துவதில் செயல்திறன் வாய்ந்த கடன் விநியோகத்தை வலுப்படுத்துவதற்கு பல எண்ணிக்கையான புதிய கொள்கைப் பணிப்புரைகளை எடுத்துள்ளது.** இலங்கைக்கான தேசிய நிதியியல் அனைத்து மக்களுக்கும் நிதியியல் பணிகளை வழங்கும் உபாயமொன்றினை உருவாக்குவதற்கு மத்திய வங்கி நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இது தொடர்பில், மத்திய வங்கியானது நாடு முழுவதும் நிதியியல் அனைத்து மக்களுக்கும் நிதியியல் பணிகளை வழங்கும் நடவடிக்கையினை மேம்படுத்துவதற்காக மிகவும் காத்திரமான மற்றும் வினைத்திறன் மிக்க செயன்முறையொன்றினை ஊக்குவிப்பதனை இலக்காகக் கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய நிதியியல் அனைத்து மக்களுக்கும் நிதியியல் பணிகளை வழங்கும் உபாயமொன்றினை உருவாக்குவதற்கு உலக வங்கிக் குழுமத்தின் அங்கத்துவரான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. மேலும், மத்திய வங்கி பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் 2018 சனவரியில் ஒருங்கிணைப்பு உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டுள்ளது.

- **2018 முதல் ஒன்பது மாதங்களின் போது திட்டங்களின் கீழ் கடன்களைப் பதிவுசெய்தல் மற்றும் மீள்நிதியளித்தலினை தன்னியக்கப்படுத்துவதற்கு**

8

அட்டவணை 8.12

**கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள்**

| கடன் திட்டம் | கடன் பகிர்ந்தளிப்புக்கள் | | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 சன-ஓகத் | | 2018 சன-ஓகத் | | 2018 சன-ஓகத் | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| தே.வி.வி.அ.செ* | 7,979.0 | 622.0 | - | - | - | - |
| சி.வி.வி.ப.அ.நி - சு.நி.வ.வ** | - | - | 527.0 | 106.4 | - | - |
| **மொத்தம்** | - | - | **527.0** | **106.4** | - | - |

*2018 திசெம்பர் 31இல் நிறைவு பெற்ற சகல தேசிய விவசாய வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்களின் (தே.வி.வி.அ.செ) செயலாற்றங்கள் உள்ளடங்கலாக.

**2018 மேயிலிருந்து செத்தெம்பர் வரை

சி.வி.வி.ப.அ.நி - சு.நி.வ.வ - சிறு உடமையாளர் விவசாய வியாபார பங்குடமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியத்தின் வருமான உருவாக்கம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**மத்திய வங்கி பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தது.** தன்னியக்கச் செயன்முறையானது சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கை கூறின் நிறுவனசார் வலுப்படுத்தலின் கீழ் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கடன் திட்டங்களிலிருந்து ஆரம்பிக்கப்படும். இச்செயன்முறை சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு, பங்கேற்பு நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்கள் என்பனவற்றின் கூட்டிணைப்புடன் நிறைவுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன், மத்திய வங்கியானது வாய்ப்பான கிராமங்களை தெரிவுசெய்வதன் மூலம் வர்த்தக அளவிலான விவசாய உற்பத்திகளுக்கான “ஒரு கிராமம் ஒரு - உற்பத்தி” என்ற எண்ணக்கருவினை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பரந்த குறிக்கோள், இலங்கை அரசாங்கத்தின் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுக்கு துணையளிப்பதாகும்.

- **மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கத்தின் நோக்கு 2025 உபாயத்திற்கு இசைவாக “என்றபிரைஸ் ஸ்ரீலங்கா" என்ற நிகழ்ச்சித் திட்டத்தினை இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.** “என்றபிரைஸ் ஸ்ரீலங்கா” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இலங்கை அரசாங்கம் நாட்டின் தொழில் முயற்சியாளர்களுக்காக 100 சதவீத வட்டி உதவுதொகைக்கு 25-100 சதவீதம் வழங்குகின்ற 15 வட்டி உதவுதொகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சலுகைத் திட்டங்களின் பிரதான குறிக்கோள் தமது தொழில்முயற்சி இலக்குகளை எதிர்பார்க்கின்ற ஒவ்வொரு இலங்கையருக்கும் நிதியியல் உதவியினை வழங்குவதற்கான தனித்துவமிக்க உட்கட்டமைப்பொன்றினை நிறுவுவதாகும்.

- **பொதுமக்களின் திறன் அபிவிருத்தி மற்றும் கொள்ளளவைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றின் தேவையினை இனங்கண்டு, மத்திய வங்கியானது 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் உயர்மட்ட நிதியியல் உட்சேர்க்காமை இனங்காணப்பட்ட பிரதேசங்களில் நிதியியல் அறிவினையும் உட்சேர்த்தல் தன்மையினையும் ஊக்குவிக்கும் நோக்குடன் பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.** அதற்கமைய, தொடர்புடைய காலப்பகுதிக்காக இலக்கு வைக்கப்பட்ட 114 நிகழ்ச்சித்திட்டங்களை விஞ்சி 121 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மத்திய வங்கி நடாத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக நிதியியல் அறிவு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் திறன்கள் அபிருத்தி ஆகியவற்றை மையப்படுத்தியிருந்தது.

## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் அபிவிருத்தி

- **2018ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி, தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தேவைகளை வழங்கும் பொருட்டு நாட்டின் டிஜிட்டல் கொடுப்பனவு பொறிமுறையினை மேம்படுத்துவதற்காக பல வழிமுறைகளைப் பின்பற்றியது.** நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட இரண்டு முறைமைகளான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை என்பனவற்றை உள்ளடக்கிய லங்கா செட்டில் முறைமையானது தொடர்ந்தும் நாட்டில் உயர் பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கான பாதுகாப்பானதும் நம்பகமானதுமான பொறிமுறையொன்றினைத் தொடர்ந்தும் வழங்கியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது உயர் பெறுமதி கொண்ட நேர முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர் மற்றும் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்த வேளையில் லங்கா செகுயரானது வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையின் மீது பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களைத்

தீர்ப்பனவு செய்தது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது 2018 முதல் ஆறு மாத காலப்பகுதியில் காசல்லாக் கொடுப்பனவின் மொத்தப் பெறுமதியில் 84.1 சதவீதத்திற்கு வகைகூறி நாட்டின் இலங்கை ரூபா கொடுக்கல்வாங்கல்களுக்கான முக்கிய வங்கிகளுக்கிடையிலான நிதிய மாற்றல் முறைமையொன்றாகத் தொடர்ந்தும் விளங்கியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்தச் சராசரி அளவும் பெறுமதியும் 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் முறையே 1,644.5 ஆகவும் ரூ.379.2 பில்லியனாகவும் இருந்தன.

- **நாடளாவிய முறையில் காசோலை தேறல் செய்யும் நேரத்தினை ஒரு நாளுக்குக் குறைத்தமையின் மூலம் (T+1) காசோலைத் தீர்ப்பனவின் வினைத்திறனை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 2006இல் அறிமுகப்படுத்தப்பட்ட காசோலைப் பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையானது சில்லறைக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தொடர்ந்தும் வினைத்திறனுடன் செயலாற்றியது.** 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் காசோலைகளின் தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த அளவும் பெறுமதியும் முறையே 37,735,279 ஆகவும் ரூ.7.9 றில்லியனாகவும் விளங்கியது.

- **உயர் கொடுக்கல்வாங்கல் அளவுகளை வசதிப்படுத்துவதற்காக அதேநேரக் கணனிப் பொறிமுறையொன்றினை வழங்குகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது ஆய்விற்குரிய காலப்பகுதியில் தொடர்ந்தும் சுமுகமாகத் தொழிற்பட்டது.** இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் போன்ற சிறிய பெறுமதியினைக் கொண்ட தொகை வடிவிலான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. 2018ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அளவும் பெறுமதியும் முறையே 24,291,209 ஆகவும் ரூ.1,452.5 பில்லியனாகவும் காணப்பட்டது.

- **“லங்கா பே" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியை நிறுவுவதற்கு இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் வசதியளித்தது.** பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியானது ஐந்து உள்ளக ரீதியில் தொழிற்படுத்தத்தக்க பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி, பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி, பொதுவான விற்பனை நிலைய ஆழி, மற்றும் பொதுவான செல்லிடத் தொலைபேசி ஆழி என்பனவற்றைக் கொண்ட வலையமைப்பொன்றாகும். தீர்ப்பனவு இடர்நேர்வுகளைக் குறைக்கும் பொருட்டும் இம்முறைமைகளின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி என்பனவற்றின் கொடுக்கல்வாங்கல்களின் வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக மேலதிகத் தீர்ப்பனவுச் சுற்றுவட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- **பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் முதலாவது கட்டமாக விளங்கும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி 2013 யூலையில் அதன் நேரடித் தொழிற்பாடுகளைத் தொடங்கியது.** 2018இன் சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி ரூ.248.3 பில்லியன் தொகை கொண்ட 29.4 மில்லியன் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது. பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்ட அட்டைகளின் கொடுக்கல்வாங்கல்களினது பாதுகாப்பினை அதிகரிக்கும் பொருட்டு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் அவர்களினால் நிறுவப்பட்டுள்ள தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிகளில் யூரோ பே, மாஸ்டர் அட்டை மற்றும் விசா அட்டைத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டனர். 2018 சனவரி 01 இலிருந்து யூரோ பே, மாஸ்டர் அட்டை மற்றும் விசா என்பனவாக இருக்காத தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற மோசடியான கொடுக்கல்வாங்கல்களுக்கான பொறுப்பு அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களினால் வழங்கப்படுவதற்கு இயலுமைப்படுத்தப்படல் வேண்டும்.

- **பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் இரண்டாவது கட்டமான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி 2015 ஓகத்து 21 அன்று நடைமுறைக்கிடப்பட்டது.** பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியானது தன்னியக்கக் கூற்றுப் பொறி இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், கிஷோக்

மற்றும் கருமபீடத்திலான கொடுப்பனவு போன்ற பல்வேறு கொடுப்பனவு வழிப்படுத்தல்களினூடாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்குப் பொதுவான உட்கட்டமைப்பொன்றினை வழங்குகின்றது. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 2018 சனவரி இறுதியில் உறுப்புரிமைகளைப் பெற்றுக்கொண்டன. இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியானது 2018 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் ரூ.429.6 பில்லியன் கொண்ட 4.7 மில்லியன் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது.

- **நாட்டின் கொடுப்பனவுத் தேவைப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியில் பல அபிவிருத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலை மத்திய வங்கி வழங்கியது.** இதன்படி, லங்கா பே, அதேநேரக் கொடுப்பனவுத் தளமானது இலங்கைச் சுங்கத்திற்கான அதேநேரக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் 2017 யூலை 20ஆம் நாளன்று ஆரம்பிக்கப்பட்டது. 2018இன் செத்தெம்பர் இறுதியில் எட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், லங்கா பே அதேநேர கணனிவழி கொடுப்பனவுத் தளத்துடன் இணைக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கி, லங்கா பே கணனிவழி கொடுப்பனவுத் தளத்தினை உண்ணாட்டரசிறைத் திணைக்களம், மாகாண சபை அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை என்பனவற்றுடன் இணைப்பதற்கு லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டிற்கு ஒப்புதலை வழங்கியது. மேலும், கணக்கு இலக்கங்களை தவறாகப் பதிவதனால் ஏற்படும் கொடுக்கல்வாங்கல் நிராகரிப்படுவதற்குத் தீர்வொன்றினைக் காண்பதற்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் கொடுக்கல்வாங்கல்களுக்காக கொடுப்பனவு பரிமாற்றப் பெயர் கோட்பாடொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி, கொடுப்பனவாளர்களின் செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் கணக்கிற்காக வழங்கப்பட்ட புனை பெயர் என்பன கணக்கு இலக்கத்திற்குப் பதிலாகப் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் நிதியக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படும்.

- **2018 இறுதிக்கு முன்னதாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள பொதுவான விற்பனை மைய ஆழி தேசிய அட்டைத் திட்டம், ஏதேனும் தனியுடமை அட்டைத் திட்டம் அல்லது பன்னாட்டு அட்டைத் திட்டத்தின் இணக்கப்பாட்டிற்குட்பட்டு அத்தகைய பன்னாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டையின் கீழான பொதுவான விற்பனை மைய ஆழியின் உறுப்பினர் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளை முக்கியமாகப் பயன்படுத்துகின்ற விற்பனை மைய ஆழியில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு அட்டை கொடுக்கல்வாங்கல்களுக்கு ஆழிப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு வசதிகளை வழங்கும்.** பொதுவான விற்பனை மைய ஆழியின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான விற்பனை நிலைய ஆழியிலுள்ள நிதியியல் நிறுவனங்களின் உறுப்பினர்கள் தொழிற்பாடுகள் மீதான 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரையினை மத்திய வங்கி விடுத்தது.

- **உள்நாட்டுக் கொடுப்பனவு அட்டை கொடுக்கல்வாங்கல்களின் செலவினைக் குறைக்கும் பொருட்டு தேசிய அட்டைத் திட்டமொன்றினை கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கி தேசிய அட்டைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டிற்கு ஒப்புதலை வழங்கியது.** தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு அட்டைகளுக்கு பன்னாட்டு ரீதியான அங்கீகாரத்தை வழங்கும் விதத்தில் தேசிய அட்டைத் திட்டம் பன்னாட்டு அட்டைத் திட்டத்துடன் பங்குடமையொன்றினை நடைமுறைப்படுத்தும். பொதுவான விற்பனைநிலைய ஆழி தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளுக்கான ஆழிப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு வசதிகளை வழங்கும்.

- **கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோரின் தொழிற்பாடுகள் மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் என்பன 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமை ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளினது நியதிகளில் மேற்பார்வை செய்யப்பட்டன.** 2018இல் இ-பண முறைமைகள் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டமைப்பிற்குள் தொழிற்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமையின் உரிமம்பெற்ற தொழிற்பாட்டாளர்கள் தொடர்பில் மத்திய வங்கியினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களைக் கண்காணிப்பதற்கு தலத்திலான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது.

- வணிகர்களுக்கு உரிய நேரத்திலான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் பொருட்டும் அட்டை உடமையாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டும் பணி

வழங்குவோர்களினூடாக கொடுப்பனவு அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களைக் கையேற்பதன் மீது நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்காக பணி வழங்குவோரினூடாக கொடுப்பனவு அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் கையேற்பு மீதான பணிப்புரைகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் கீழ் விடுக்கப்பட்டது.

- **நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்களைப் பயன்படுத்துகின்ற அண்மைய போக்குகளைப் பரிசீலனையில் கொண்டு, செல்லிடப் பிரயோகங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டும் வாடிக்கையாளர் தகவல்களின் இரகசியத்தன்மையைப் பேணும் பொருட்டும் நியம விதிகளை ஏற்படுத்துவது அவசியமானதொன்றாக மாறியிருக்கிறது.** இதன்படி, கொடுப்பனவுகளுடன் தொடர்பான செல்லிடப் பிரயோகங்களுக்கான குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமங்கள் மீதான வழிகாட்டல்கள், கொடுப்பனவுப் பணிகளை வழங்குவதற்காக நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் செல்லிடப் பிரயோகங்களுக்கான குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமங்களை ஏற்படுத்துவதற்காக 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்டன.

- **கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவாக விளங்கும் தேசிய கொடுப்பனவு ஆணைக்குழு நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைக்கான தோற்றம் பெற்றுவருகின்ற புத்தாக்கக் கொடுப்பனவுத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு பின்டெக் துறை மற்றும் புத்தம்புதிய தொழில்நுட்பங்களின் அபிவிருத்திகளை ஆராயும் பொருட்டு இரண்டு குழுக்களை நியமித்தது.** மத்திய வங்கி இக்குழுக்களினால் தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விதந்துரைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே முன்னெடுத்திருக்கிறது.

## 8 எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **தற்போதுள்ள நாணயக் கொள்கை பணிப்புரைகளின் அடிப்படையில் நடுத்தர காலப் பகுதியில் கடன் வளர்ச்சியானது படிப்படியாக மிதமடைந்து நிலையான மட்டத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** தற்போது, செயற்பாட்டுச் சூழலில் உள்ள சவால்கள் காரணமாக, செயற்படாக் கடன்களில் ஒரு படிப்படியான அதிகரிப்பு காணப்படுகின்றது. கடன்களின் அதிகரிப்புக் காரணமாக செயற்படாக் கடன்கள் மேலும் அதிகரிக்க முடியுமாதலால் வங்கிகள் எச்சரிக்கையாக இருப்பதுடன், அனைத்து தொடர்புடைய இடர்நேர்வுகளையும் குறைப்பதற்கான சரியான இடர்நேர்வு முகாமைத்துவ மேலாண்மை முறைகள் இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

- **வங்கிகளின் மேம்பட்ட மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக வங்கிகளின் மூலதன மட்டங்கள் மேலும் பலப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.** மேம்பட்ட குறைந்தபட்ச மூலதன அளவு மற்றும் பாசல் III குறைந்தபட்ச மூலதனத் தேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை போன்றவற்றால் வங்கிகள் மேம்படுத்தப்பட்ட உயர்தர மூலதனத் தேவைப்பாடுகளை அடைய எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கு தவறும் வங்கிகள் தன்னார்வ அடிப்படையில் ஒருங்கிணைப்பதற்கு ஊக்குவிக்கப்படும். மேலும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 நிதியியல் சாதனங்கள் அடிப்படையில் வங்கிகள் எதிர்பார்த்த கடன் இழப்பு அணுகுமுறையின் கீழ் கடன் இழப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதன்படி வங்கிகள், ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்ய மூலதன அளவுகளை மேம்படுத்த வேண்டும். இது நிதியியல் மற்றும் பொருளாதார அழுத்தத்திலிருந்து எழும் அதிர்ச்சிகளை உறிஞ்சி, நிதியியல் துறையிலிருந்து மெய்ப்பொருளாதாரம் வரை இடர்நேர்வு கசிவினால் ஏற்படும் ஆபத்தைக் குறைத்து வங்கித்தொழில் துறையின் திறனை எதிர்வரும் ஆண்டுகளில் மேம்படுத்தும்.

- **வங்கிகளின் திரவத்தன்மை நிலைகள் ஆரோக்கியமான மட்டங்களில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.** 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பாசல் III திரவத்தன்மைப் போதுமை விகிதத்தின் அடிப்படையில், வங்கிகள் 2019 தொடக்கம் 100 சதவீதம் திரவத்தன்மை போதுமை விகிதத்தைப் பேணுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. திரவத்தன்மைப் போதுமை விகிதமானது எதிர்வரும் 30 நாட்களுக்குள் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை, திரவத்தன்மை அழுத்த சூழ்நிலைகளிலும் இலகுவாகவும், உடனடியாகவும் காசாக்கிக் கொள்ளக்கூடிய உயர் தரமான பிரச்சனைகள் அற்ற திரவச் சொத்துக்களை

கொண்டிருப்பதன் மூலம் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதனை நோக்கமாகக் கொண்டது. மேலும் 2019ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் தேறிய நிலையான நிதியிடல் விகிதம் வங்கிகள் போதுமான நிலையான நிதியியல் மூலங்களை பேணுமாறு தேவைப்படுத்தப்பபடும். இதன் அடிப்படையில் வங்கிகளில் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் மேலும் பலப்படுத்தப்படும்.

- **உண்மைப் பொருளாதாரத்திலிருந்து வங்கித்தொழில் துறைக்கு எழும் எந்தவொரு இடர்நேர்வுக் கசிவினாலும் ஏற்படும் அபாயங்களையும் கண்டறிவதற்காக பேரண்ட பொருளாதார மாறுதல்களின் போக்குகள் மற்றும் மாற்றங்கள் கண்காணிக்கப்படும்.** அதற்கிணங்க, வங்கித்தொழில் முறைமையின் உறுதித்தன்மையைப் பாதிக்கும் எதிர்கால இடர்நேர்வுகளைத் தடுப்பதற்காகப் பொருத்தமான பேரண்ட முன்மதியான நடவடிக்கைகள் தேவைப்படின் அறிமுகப்படுத்தப்படும். உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது பயனுள்ள வங்கி மேற்பார்வைக்கான பாசல் மையக் கோட்பாடுகள் மற்றும் ஏனைய பன்னாட்டு மற்றும் பிராந்திய சிறந்த நடைமுறைகளுக்கு அமைய மேலும் பலப்படுத்தப்படும். தனிப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் முறைமையின் இயங்கு திறன், செயலாக்கம், நிலைபெறு தன்மை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு வங்கிகளின் பரீட்சை முறைமைகள் மேம்படுத்தப்படும்.

- **நிதியியல் தொழில்நுட்பம் மற்றும் கோவைச் சங்கிலி போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் தோற்றம் காரணமாக வங்கிகளின் வணிக மாதிரிகள் புதிய வாய்ப்புகளை உருவாக்கி காலப்போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தலாம்.** மேலும், இந்த வளர்ச்சிகள் வங்கித்தொழில் துறையில் புதிய இடர்நேர்வுகளின் தோற்றத்திற்கு வழிவகுக்கும். அதன்படி, வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையை பேணக்கூடியவாறு இத்தொழில்நுட்பங்களை இணைத்துக் கொள்வதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

- **சைபர் பாதுகாப்பிலான அதிகரித்த இடர்நேர்வுகளினால், பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் வங்கிகளுக்கான சைபர் பாதுகாப்பு தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பிற்கான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும்.** இம்முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறைகள், வங்கிகளுக்கான தகவல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வங்கிகள் தங்களது தகவல் அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்ப தளங்களை மேம்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படும். 2018ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் தொழில்நுட்ப இடர்நேர்வு ரீதியான பின்னடைவுகளை மேம்படுத்துவதற்கு வங்கிகளுக்கு மத்திய வங்கி ஒரு வழிகாட்டலை வழங்கியுள்ளது.

- **நாடு முழுவதும் நிதியியல் உள்வாங்கல்களை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற நோக்கத்துடன் வங்கித்தொழில் துறையானது வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் தன்மையினை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பணி விநியோக ஊடகமாக அதிகரிப்பதன் மூலம் செல்லிட/தொலைபேசி வங்கி மற்றும் இணைய வங்கி போன்ற டிஜிட்டல் முன்முயற்சிகளால் வங்கித்தொழில் அணுகலை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அனைத்து அமைப்பு முறைகளுடன் தொடர்புபட்ட தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்தை வலுப்படுத்த வங்கிகள் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- **பெரிய வணிக வங்கிகள் பிராந்திய விரிவாக்கத்திற்கான வழிகாட்டலை ஊக்குவிக்க வேண்டும்.** இது வங்கித்தொழில் துறையில் புவியியல் ரீதியான அதிகரிப்புக்கு வழிவகுக்கும். எனவே, ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கிடையிலான தகவல் பகிர்வு மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட மேற்பார்வை என்பவற்றை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஏனைய பிராந்திய ஒழுங்குபடுத்துநர்களுடன் நெருக்கமான தொடர்புகள் பேணப்படும்.

- **வங்கிகளின் மூலதன மற்றும் திரவத்தன்மை மட்டங்களை வலுப்படுத்துவதற்கான ஒழுங்குமுறை முயற்சிகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கம்பனி ஆளுகை என்பனவற்றில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு வங்கித்தொழில் துறையின் நிலைபெறுதன்மை பராமரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** மேலும், டிஜிட்டல் சகாப்தத்தில் எழும் எந்த இடர்நேர்வுகளையும், தொழில்நுட்ப புத்தாக்கங்கள் கெடாத வண்ணம், குறைப்பதற்கான பயனுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஏற்படுத்தப்படுவதனை இலங்கை மத்திய வங்கி உறுதி செய்யும்.

- **உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான சொத்துடமை வரையறைகள் மீதான பணிப்புரை: சொத்துடமையும் தீர்மானங்களை மேற்கொள்வதும்**

**பிரதான பங்குடமையாளரிடம் அல்லது பிரதான பங்குடமையாளருடன் தொடர்புபட்ட ஒரு சில பங்குடமையாளரிடம் தொடர்புபட்ட ஒரு சில பங்குடமையாளரிடம் செறிந்து காணப்படுமிடத்து நிதிக் கம்பனிகள் முறிவடைந்து போவதற்கான காரணங்களிலொன்றாக மோசமான கம்பனி ஆளுகை நடைமுறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.** நடைமுறைப்படுத்துவதற்காக 3 - 4 ஆண்டு காலத்தினை வழங்கி இத்தொழில்துறையின் ஆலோசனையுடன் உரிமம்பெற்றநிதிக் கம்பனிகளுக்கான சொத்துடமை வரையறைகளின் மீது பணிப்புரைகளை விடுப்பதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. சொத்துடமை வரையறைகளை உருவாக்கும் பொழுது கம்பனியின் செயலாற்றம், இணங்குவிப்பு மட்டம், சிறந்த கம்பனி ஆளுகை, நடைமுறைப்படுத்தப்பட்ட மீளமைப்புத் திட்டங்கள் மற்றும் ஒட்டுமொத்த நிதியியல் துறை அபிவிருத்திகள் என்பன பரிசீலனையில் கொள்ளப்படும்.

- **தற்பொழுதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு மாற்றங்களைச் செய்வதன் மூலம் நடுத்தர காலப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் உறுதிப்பாட்டினை மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.** தொடர்பான பணிப்புரைகளுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள மாற்றங்கள் 2018இன் முதலரைப்பகுதியில் முன்மொழியப்பட்டுள்ளன. குறிப்பாக, அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் தற்போதுள்ள திரவத்தன்மை மற்றும் ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்கு மாற்றங்கள் செய்யப்படும். கடன்பாட்டுத் தேவைப்பாடுகள் மீது புதிய பணிப்புரை விடுக்கப்படும். இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மீது வரையறைகளை விதிக்கும்.

- **பொருத்தமான தீர்மானக் கட்டமைப்பினை நிறுவுதல்: முறிவடைந்த சில நிதிக் கம்பனிகள் தொடர்பான தீர்மானத்தின் மீது முன்மொழியப்பட்ட முன்னெடுப்புக்கள் மூலமாக சாதகமான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.** தற்பொழுது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எஞ்சியுள்ள இடர்ப்பாட்டிலுள்ள கம்பனிகளைக் கலைத்து விடுவதற்காக முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இடர்ப்பாட்டிலுள்ள இரண்டு கம்பனிகளின் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினூடாக தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கான கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கான செயன்முறைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தலை திணைக்களத்தினால் இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கம்பனிகள் தொடர்பில் விரைவான தீர்மான நடவடிக்கை எடுப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் நிதித்தொழில் சட்டத்திற்குத் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களுடன், நாணயச் சபை இடர்ப்பாட்டிலுள்ள அல்லது கடன் தீராற்றலற்ற நிலையிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனி தொடர்பில் ஒவ்வொரு விடயங்களினதும் அடிப்படையில் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் பணிப்பாளருக்குக் குறிப்பிட்ட அடையாளம் காணப்பட்ட அதிகாரங்களை அளிப்பதற்கான அதிகாரம் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்படும். தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொழிற்பாடுகள் இரண்டின் மீதும் செயன்முறைகளையும் தொழிற்பாட்டு நடைமுறைகளின் அபிவிருத்தி மீதும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. பல நிதிக் கம்பனிகளின் மோசடிகளிலும் ஒழுங்கீனங்களிலும் தாமாகவே தொடர்புபட்டுள்ள குற்றம் சாட்டப்பட்ட பணிப்பாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்துநரூடாகவும் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் ஊடாகவும் ஒழுங்குகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. நிதித்தொழில் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்ட ஏற்பாடுகளின் கீழ் மேலும் அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட திட்டங்கள் மீது பல்வேறு புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரம் மற்றும் தடை செய்யப்பட்ட திட்டங்களை நடத்துவது மற்றும் முதலீடு செய்வதன் அபாயங்களை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் நடத்தும்.

- **நடுத்தரக் கால பேரண்ட இறைக் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்பட்டவாறு, அரசாங்கின் நிதியிடல் தேவைகள் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் இடர்நேர்வுகளின் முன்மதியுடைய மட்டங்களில் பூர்த்தி செய்யப்படுவதனைப் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பொருத்தமானதொரு உள்ளமைப்புடன் அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் தேவைகள் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதிகளைத் திரட்டுவதற்காக நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயம் உருவாக்கப்பட்டிருக்கிறது.** மேலும் அரசு நடுத்தர

8

கால படுகடன் உபாயத்தினை தெளிவுபடுத்தி நடைமுறைப்படுத்துவதில் வெளியிலிருந்தான அதிர்வுகளுடன் தொடர்பான வழிமுறைகளைத் தணிப்பது பற்றிப் பரிசீலனையில் கொண்டிருக்கிறது. நீண்ட காலம் நீடித்துநிலைத்திருக்கும் இறை உறுதிப்பாட்டுக் கொள்கைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொ.உ.உ.ற்பத்திக்கான படுகடன் விகிதம் 2016 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 78.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 இறுதியில் 77.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முதலாந்தர மிகைகளின் எதிர்பார்க்கப்பட்ட உருவாக்கம் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார நிலைமைகளுடன் சேர்ந்து படுகடன் திரட்சியைக் குறைப்பதற்கு அரசாங்கத்தை இயலுமைப்படுத்தியதுடன், இது, நடுத்தர காலப்பகுதியில் மொ.உ.உ.ற்பத்திக்கான படுகடனையும் மொ.உ.உ.ற்பத்திக்கான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை விகிதத்தையும் குறைப்பதற்கு அரசாங்கத்தை இயலுமைப்படுத்தியது. மேலும், தீவிரமான பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் சட்டமானது உரிய காலத்திற்கு முன்னரே மீள்நிதியிடல் தேவைப்பாடுகளின் ஒரு பகுதியை முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் இரண்டிற்குமான முதிர்ச்சிக் காலப்பகுதியை விரிவாக்குவதற்கும் அரசாங்கத்தினை இயலுமைப்படுத்தியது. பொதுவாக இத்தகைய நடவடிக்கையானது முதலீட்டாளர் தளத்தினை பன்முகப்படுத்துவதற்கும் தற்போது நிலவுகின்ற சந்தை வீதங்களின் அடிப்படையில் போட்டி வீதங்களில் கடன்படுவதற்கும் படுகடன் சொத்துப்பட்டியலின் காலத்தை விரிவாக்குவதற்கும் அண்மைய காலத்தில் மீள்நிதியிடல் நிதியிடலைக் குறைப்பதற்கும் ஏதேனும் புதிய வழங்கல்களுக்காக சாதகமான விலை நிலைமைகளை உருவாக்குவதற்கும் அரசாங்கத்திற்கு உதவும்.

- **நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் இலக்குகளை எய்துவதற்காக இதன் இறைத் தொழிற்பாடுகளுக்கு கூடியளவு வசதிகளை உருவாக்குவதற்கான கொள்கை சீர்திருத்தங்களுடன் இணைந்து அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறையினை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் உறுதியான முன்னேற்றத்தினைக் காட்டியது.** உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தினை நீடிப்பதற்கும் மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்கால உள்நாட்டுப் படுகடனின் பங்கினைக் குறைப்பதற்கும் மொத்தப் படுகடனில் குறுங்கால வெளிநாட்டு நாணயப் படுகடனின் பங்கினைக் குறைப்பதற்குமான உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேளையில் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மேலும் குறைக்கப்படுகின்றன. நடுத்தர காலத்தில் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மூலவளங்களின் கிடைப்பனவுகளின் அடிப்படையில் தேவையான இடைவெளிகளை உருவாக்குவதற்கும் முதிர்ச்சி சுழற்சி வட்டத்தினை ஒன்றுசேர்ப்பதற்கும் இறைத்திரட்சியை உத்வேகப்படுத்துவதற்குமேற்ற விதத்தில் உபாய ரீதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இதேபோன்று குறைந்த விளைவில் நீண்ட கால திறைசேரி முறிகளை வழங்குவது படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைச் சுமுகப்படுத்தி நடுத்தர காலப்பகுதியில் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தினை அதிகரிக்கும். மேலும், பன்னாட்டுத் தரமிடல் முகவர்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்துவது இலங்கை அரசாங்கத்திற்கான நாட்டிற்கான பன்னாட்டு தரமிடலை வலுப்படுத்துவதற்கு உதவும்.

- **நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் ஒரு பகுதியாக, யூரோ - டொலர் முறிகள் அல்லாதவற்றின் வழங்கல்களினூடாக எதிர்காலப் படுகடன் தீர்ப்பனவிற்காக மாற்றுச் சந்தை நிதியிடலுக்கான சாத்தியங்களைக் கண்டறியும்.** மாற்றுச் சந்தைகளிலுள்ள வாய்ப்புக்கள் அரசாங்க உறவுகளுக்காக வலுவான அரசாங்கத்தினை உத்வேகப்படுத்துகின்ற சாத்தியங்களுடன் பரிசீலனைக்கெடுக்கும் செயன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. செலவு மற்றும் இடர்நேர்வு குறிக்கோள் இரண்டினையும் எய்துவதற்காக முன்னுரிமைகளுடன் இணைக்கப்பட்ட மரபுவழியல்லாச் சந்தைகள் முழுவதிலும் சாத்தியமானளவிற்கு வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்குடன் இவை சாமுராய் முறிகள், பண்டா முறிகள் என்பனவற்றினை மதிப்பிடுவதனையும் சாத்தியமான கூட்டுக்கடன்களையும் உள்ளடக்குகின்றன.

- **எதிர்பார்க்கப்பட்ட நாட்டிற்கான தரமிடலை எய்துவதற்கும் பேணுவதற்கும் அரசாங்கத்தின் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சிச் செயன்முறை மற்றும் தீவிரமான பொறுப்பு முகாமைத்துவ சட்டத்தினை காத்திரமான முறையில் நடைமுறைக்கிடும் செயன்முறையும் கடுமையாகப் பின்பற்றப்படுவது முக்கிய காரணிகளாக விளங்கும்.** அத்துடன் ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்கள் படிப்படியாக வழமைக்குத் திரும்புகின்றமை மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி

8

நாடுகளுக்கான ஏனைய முக்கிய அமைப்புக்கள் நேர அடிப்படையில் பன்முகப்படுத்தப்பட்ட மூலவளங்களை தேவைப்படுத்துகின்றன. ஏனெனில் இவை சலுகை ரீதியான மற்றும் செயற்றிட்டம் தொடர்பான வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களைக் குறைப்பதுடன் இணைந்து எதிர்காலத்தில் வர்த்தகக் கடன்பாடுகளின் செலவினை அதிகரிக்கக்கூடியதாக இருக்கின்ற வேளையில் இலங்கை மேல் நடுத்தர வருமானத்தை ஈட்டுகின்ற நாடொன்றாக தரமுயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக தற்போதுள்ள சலுகை ரீதியான மற்றும் செயற்றிட்டக் கடன்கள் தொடர்பான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உயர்வடையும்.

- **தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பின்டெக் குழுவின் விதந்துரைப்புக்கள் 2019இல் நடைமுறைக்கிடப்படும்.** வாடிக்கையாளர் வசதிகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் வேறுபட்ட கொடுப்பனவுப் பொறிமுறைகளையும் சாதனங்களின் உள்ளகக் கொடுப்பனவுப் பொறிமுறைகளை உறுதிப்படுத்துவதற்குமான உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்காக 2018 ஒத்தோபரில் விடுக்கப்பட்ட தேசிய கியுஆர் குறியீட்டு நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பிரபல்யப்படுத்துவதற்கும் மத்திய வங்கி வசதியளிக்கும். மேலும், போக்குவரத்துத் துறையில் பயணச்சீட்டுக்களை வழங்குதல், கட்டணங்களைச் சேகரிப்பதற்காக தேசிய போக்குவரத்து அட்டை மற்றும் உட்கட்டமைப்புக் கட்டமைப்பு என்பனவற்றின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிக்கப்படும். இம்முன்னெடுப்பானது போக்குவரத்துத் தொழில் துறை கொடுப்பனவுப் பொறிமுறையை தரப்படுத்துவதுடன் காசு குறைந்த காசல்லா சமூகம் ஒன்றினை உருவாக்கும் தேசியக் குறிக்கோளுக்கும் பங்களிக்கும். மேலும், ஒழுங்குமுறைகளில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காணும் பொருட்டும் பின்டெக் அவற்றின் சாதனங்களை பாதுகாப்பானதும் பத்திரமானதுமான சூழ்நிலையொன்றில் அபிவிருத்தி செய்வதற்கான தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பினை நிறுவுவதற்கான செயன்முறைகள் ஆரம்பிக்கப்படும்.

- **புதிய தொழில்நுட்பங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரைப்புக்களுக்கேற்ப நிதியியல் துறையில் புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுவது தொடர்பில் மேலும் ஆராய்வதற்காக தொழிற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.** தொழிற்பாட்டுக் குழுவானது நிதியியல் துறைப் பிரயோகங்களில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் சாத்தியங்கள் பற்றி ஆராய்ந்து 2019இல் அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

- தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் ஆழிப்படுத்தல் மற்றும் வழிப்படுத்தலுக்கு வசதியளிக்கும் பொருட்டு பொதுவான விற்பனை மைய முறைமையுடன் இணைந்துள்ள கொடுப்பனவு அட்டைகளின் நிதியியல் கையேற்புக்களை மத்திய வங்கி கண்காணிக்கும்.

8